# குமுத வாசகம்

## மூன்றும் படிவம்

(சிறப்புப் பகுதி)

பேராசிரியர்,
**வித்துவான். பாலூர். கண்ணப்ப முதலியார் B. O. L.**
தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி,
இராயப்பேட்டை, சென்னை.

27

வெளியிட்டவர்
**டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ்**
சென்னை-1.

உரிமை பதிவு]

[விலை 10 அணா ; 63 நயே பைசே.

Revised Sep. 195

0316(8) N57

## முன்னுரை

'குமுதவாசகம்' என்னும் பெயருடன் வெளி வந்துள்ள இந்நூல், சென்னை அரசியலார் புதிதாக வெளியிட்ட 1951-ஆம் ஆண்டு பாடதிட்டத்தின்படி எழுதப்பட்டுள்ளது. இது தமிழ் மொழியைச் சிறப்புப் பாடமாக எடுத்துள்ள மாணவர்கள் படிப்பதற்குரிய சிறப்புப் பகுதியை மட்டும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது.

இலக்கணப் பாடத்தைத் தனித்துப் பயில்கையிலும், உரை நடைப் பாடத்தோடு தொடர்ந்து பயிலின், அப்பாடத்தில் ஓர் உணர்ச்சியும், ஊக்கமும் தோன்றும் எனக் கருதி, ஒவ்வோர் உரை நடைப் பகுதியின் கீழும் இலக்கணப் பாடம் எழுதப்பட்டு இருப்பது, மாணவர்கள் தம் தமிழ் அறிவைச் செம்மையுடன் பெறப் பெருந்துணையாகும் என்பதில் ஐயமில்லை.

அறிவு வளர்ச்சிக்குரிய பல திறப்பட்டபாடங்களும், ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் வினாக்களும், பயிற்சியும், வேண்டிய அளவுக்குக் குறிப்புரையும் இந்நூல் தன்கண் கொண்டிருத்தலால், "பொன்மலர் நாற்றம் உற்றாற்போல்" மாணவர்கள் ஆயாசம் இன்றிப் பாடங்களை நன்கு உணர்ந்து, தம் மனத்தில் பதிய வைத்துக் கொள்வர் என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம்.

இந்நூலில் காணும் பாடல்கள் சிலவற்றை இதில் இணைத்துக்கொள்ளத் தம் இசைவைத் தெரிவித்த உரிமையாளர்கட்கு என் நன்றியுள்ள வணக்கம் உரித்தாகுக.

இந்நூலைத் தமிழ் உலகம் ஏற்று, என்னை ஆதரித்து ஊக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

18480

ஆக்கியோன்.

# பொருளடக்கம்

## உரைநடைப் பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழ்ப் பெருமை | .... | 1 |
| 2. | சேக்கிழார் | ... | 10 |
| 3. | காஞ்சிமா நகரம் | ... | 18 |
| 4. | மாணக்கர் | ... | 25 |
| 5. | புளிக்குழம்பு | .... | 31 |
| 6. | கலிங்கப் போர் | .... | 36 |
| 7. | நக்கீரர் | .... | 43 |


## செய்யுள் பகுதி


| | | | |
|---|---|---|---|
| I. | வாழ்த்துப்பா | .... | 52 |
| II. | நீதிப் பாக்கள் | .... | 53 |
| III. | சங்கநூற் பாக்கள் | .... | 57 |
| IV. | கதைப் பகுதி | .... | 59 |
| V. | சிறு நூல்கள் | .... | 65 |
| VI. | தனிப்பாடல்கள் | .... | 67 |

# தேசீய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

# நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும் குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும் திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை நதிகளின் இன்பநாதத்தில் கலக்கிறது; இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன;

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி, வெற்றி, வெற்றி.

## உரை நடைப் பகுதி

# 1. தமிழ்ப் பெருமை

### ஒரு சொற்பொழிவு

1. கற்றல் எளிது. ஆனால், கற்றவற்றை எடுத்து மொழிதல் அரிது. "கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே," என்று இன்னியவை நாற்பதும், "மாணவை மண்ணுறுத்தும் செல்வமும் உண்டு சிலர்க்கு," என நீதி நெறிவிளக்கமும் கூறும் கூற்றுக்களால் சபையின் நின்று சொற்பொழிவாற்றும் அருமைப்பாடு நன்கு விளங்கும். சொற்பொழிவு ஆற்றுந் திறம் பெற்றவரே, பின்னால் சிறந்த அறிஞராகத் திகழக்கூடும். உலகம் போற்றும் உத்தமராகவும் ஆதல் கூடும். இக்காலத்தில் தேசத் தொண்டர்களாகத் திகழும் பலரும் உயர்ந்திருப்பதற்குரிய காரணங்களுள், இப்பேச்சாற்றலும் ஒன்று. கல்வி யறிவு ஒருவனுக்கு எவ்வளவு இருந்தாலும், அதனோடு அவனுக்குக் கற்றவற்றை அவையில் அஞ்சாது எடுத்துரைக்கும் ஆற்றலும் இருத்தல் வேண்டும். அது இல்லையானால் மலர்கட்கு இதழ்கள் இருந்தும், மணம் இன்றிக் கிடந்தால், அவ்விதழ்களால் எவ்வாறான பலன் உண்டோ அவ்வாறான பலனே ஏற்படும். இதைத்தான் திருவள்ளுவரும்,

> இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்ற
> துணர விரித்துரையா தார்

என்று குறிப்பிட்டுள்ளார். "அவைஅஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வி, பூத்தலின் பூவாமை நன்று" என்று மிகவும் நயப்பாக ஏளனம் பண்ணுகிறார் குமரகுருபரர். ஆகவே, கற்றதோடு நில்லாமல் கற்றாரும் மற்றாரும் நிறைந்த சபையில், "எவ்வாறு ஒரு பொருளை எடுத்துப்பேச

வேண்டும்?" என்னும் முறையை நன்கு உணரவேண்டும். சொல்ல வேண்டிய பொருளையும் மேற்கோள்களையும், முதலில் நன்கு சிந்தித்து மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும். நினைவின் பொருட்டு ஒரு சிறு 'குறிப்பை மட்டும் சிறுதுண்டுகளில் குறித்துக் கொள்ளல் நன்மை பயக்கும். குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்துக் கொள்ள முயலவேண்டும். அதற்குள் சொல்ல வேண்டிய பொருள்களை ஒழுங்காக விரைவின்றிச் சொற்பிழை, வாக்கியப் பிழை இன்றிப் பேசவேண்டும். இந்த முறைகளை மேற்கொண்டு ஒருவன் தான் எடுத்துக் கொண்ட பொருளைப் பேசி வருவானுனல், அவன் பின்னுல் பெரும் பேச்சாளனுகத் திகழ்வான் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

2. "அறையில் ஆடி அம்பலத்தில் ஆட வேண்டும்" என்பது நம் நாட்டுப் பழமொழி. ஆகவே, சிறந்த பேச்சாளராக வரவிரும்பும் நீங்கள், உங்கள் பள்ளிக்கூடத் தமிழ்ச் சங்கத்தில் அடிக்கடிப் பேச முன் வாருங்கள். ஒரு பள்ளிக்கூட மாணவன் தான் பயின்று வரும் பள்ளிக்கூடத்தின் தமிழ்ச்சங்கத்தில் தமிழ்ப் பெருமை என்னும் பொருள் பற்றிப் பேசியதை இங்குக் கவனியுங்கள். அவன் நல்ல தமிழ் அறிவு நிரம்பப் பெற்றவன். தான் பேசப் போகும் பொருளைக் குறித்துப் பல நூல்களை நூல் நிலயத்தில் இருந்து பெற்று, அவற்றையெல்லாம் தன் சொற்பொழிவில் சொல்லப் போகிருன். இனி அவன் சொற்பொழிவுக்குச் செவிசாயுங்கள். கீழ்வருவன அவன் பேசிய பேச்சுக்கள்.

3. "அன்புமிக்க அவைத் தலைவர் அவர்களே! அருமை மாணவத் தோழர்களே! அனைவர்கட்கும் என் மனமார்ந்த வணக்கம் உரியதாகுக. நான் இப்பொழுது தமிழ்ப் பெருமை என்னும் பொருள் பற்றிப் பேசப் போகின்றேன். அவற்றுள் குற்றங் குறைகள் இருப்பின் அவற்றைப் பொருள்படுத்தாது என்னைப் பெருமைப் படுத்த வேண்டுகின்றேன்.



4. ஒரு தாய் தான் பெற்ற மகவை எந்த மொழியில் தாலாட்டிப் பாலூட்டிச் சீராட்டினளோ, அம்மொழியே அக்குழவிக்குத் தாய் மொழியாகும். பல்லாயிர ஆண்டு களாக நம் இந்தியாவில் வடக்கே திருவேங்கட மலை முதற்கொண்டு தெற்கே கன்னியா குமரி வரையில் வாழ்ந்து வந்த மக்கள் தமிழ் என்னும் தனிப்பெரு மொழியைப் பேசியும், போற்றியும் வந்தார்கள் என்பதை நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம். ஆகையால், அவ் வெல்லைக்குட்பட்ட நாமும், தமிழ் மொழியைத் தாய்மொழி என்று கூறிக் கொள்வதற்கு உரிமை உடையவராவோம். ஆகவே, "தமிழ் மொழியின் சீரையும், சிறப்பையும், பேரையும் புகழையும் எடுத்துப் பேசுவது சாலப் பொருத்த மானது."

5. "தமிழ்" என்பதற்கு இனிமை என்பது பொருள். 'தமிழ் மாருதம்' எனச் சேக்கிழாரும் "வண்டு தமிழ்ப் பாட்டு இசைக்கும் தாமரை" எனக் கம்பரும் கூறிய தண்டமிழ்த் தொடர்களில் இவ்வினிமை என்னும் பொருள் அமைந்திருப்பதையும் காண்க. இம்மொழி எழுத்து நுட்பமும், சொற் பெருக்கமும், பொருள் பொலி வும், யாப்பமைதியும், அணியழகும், ஒலி இனிமையும், தெய்வத் தன்மையும் அமைந்தது என்பது ஆழ்ந்து அறிந்த பேரறிஞர் துணிபாகும். மொழியாராய்ச்சியில் வல்லுநரான மேனாட்டு அறிஞர்கள் இம்மொழியின் ஒலி அமைப்பு, வரி அமைப்பு முதலிய சிறப்பியல்களைப் பல படப் பாராட்டி எழுதியுள்ளமையும் இதன் பெருமையை நன்கு தெரிவிப்பதாகும். இவ்வினிய பைந்தமிழைக் கற்றுச் சீரிய செந்தமிழ்ப் பாக்களைப் பாடிய இன்றமிழ்ப் புலவர்கள் கூறிய வசைகளையும் வள்ளல்கள் பொறுத் தனர் என்றால், இதன் பெருமையை என்னென்று எடுத்தி

யம்புவது! தமிழைக் கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்றும், "எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே", "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றும் புலவர் கூறுவாராயின், தமிழ் எத்தகைய பெருமையுடைய தாக இருக்க வேண்டும்? தோழர்களே! நீங்களே நன்கு சிந்தித்துப் பாருங்கள்!

6. "இந்த மொழிக்கு இலக்கணம் அமைந்திருப் பது போன்று, எந்த மொழிக்கும் அமைந்திலது," எனப் பல பழைய மொழிகளையும் கற்று வல்ல புலவர்கள் மொழி கின்றார்கள். பரஞ்சோதி முனிவர், "இலக்கண வரம்பிலா மொழி போல் எண்ணிடப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ" என்றனர். மற்றும் ஒரு தமிழ்ப் பெரியார்,

பாரறியும் அறிவினுமிப் பார்மேல்நின்ற
பசுஞானத் தானுமெட்டிப் பாற்கொணாத,
பேரறிவே! சிற்றறிவோர்க் கிருளை நீக்கும்
பேரொளியே! அங்கயற்கண் பிரியா தானே!
"யாரறிவார் தமிழருமை?" என்கின் றேன்நான்
என்னறிவீன மன்றோ? வுன் மதுரை மூதூர்
நீரறியும்; நெருப்பறியும்; அறிவுண் டாக்கி
நீயறிவித் தால் அறியும் நிலமுந் தானே.

என்று தெரிந்து பாராட்டிய பெருமை உண்மையே அன்றி உபசாரமில்லை. இம்மொழி, நாட்டுப் பற்றையும் ஒற்றுமை உணர்ச்சியையும், வீர எழுச்சியையும் அளிக் கும் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்தது. இது தேசப்பற்றை உண்டு பண்ண வல்லது என்பதற்கு நம் பாரதியார்,"

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே; —எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே!"

என்று கூறிய வீரமொழியே சான்றாகும்.

7. ஒழுக்கம் என்னும் நன்னடக்கையைப் போதிக்கும் தனிப்பெரு மாண்பு வாய்ந்தது நம் தமிழ் மொழியே, என்பது மிகையாகாது. G. U. போப்புப் பெரியார், "தென்னிந்தியர் எந்நாட்டாரினும் நல்லொழுக்கத்திற் சிறந்து முன்னணியில் நிற்றற்குரியர். அதற்குக் காரணம் "நாலடி நானூறும் திருக்குறளுமே" என்று கூறிப் போந்தனர். அவ்விரண்டு நூற்களும் தமிழ் மொழியில் அமைந்து, இம் மொழியைப் பெருமையுறச் செய்கின்றன. இதனால் பாரதியாரும், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்றனர். கடவுள் பக்தியை உணர்த்தும் தேவார, திருவாசக, நாலாயிரப் பிரபந்தங்களும் இம்மொழியில் அமைந்திருப்பது, இதன் பெருமைக்கு ஓர் அடையாளமாகும்.

8. இம்மொழிப் பாட்டுக்கள் கடவுள் பக்தியை ஊட்டிக் கல்லான நெஞ்சையும் கரைந்துருகச் செய்யும் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. இத்தகைய மாண்பு எம்மொழிக்கும் இல்லை என்று துணிந்து கூறலாம். இதனால் அல்லவா, சிவபெருமான் சுந்தர மூர்த்தி சுவாமிகளைச் "சொற்றமிழ் பாடுக" என்று கட்டளையிட்டருளினர். இக்கட்டளையால் தெய்வமே விரும்பும் பெருமை வாய்ந்த மொழி நம் தமிழ் மொழி என்பது தெரிகிறதல்லவா? இப்படியே இம்மொழியைப்பற்றி நீளச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், இம் மொழியின் பெருமையை நாமே சொல்லிக் கொள்ளுவதில் பயன் யாது? தமிழ் மொழிக்கு அன்னியரான பேரறிஞர் புகழ்ந்து கூறிய சில பொன்னுரைகளையும் நான் குறித்துக் கொண்டு வந்துள்ளேன். அவற்றையும் கேட்டு நம் தமிழ்மொழியின் பெருமையினை உணர்ந்துகொள்வோமாக.

9. கனம் **வின்ஸ்லோ** என்னும் மாபெரும் அறிஞர் "தமிழ்மொழி, செய்யுள் அமைப்பில் கிரேக்க மொழியினையும், இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியையும் வெல்ல வல்லது" என்றும், **கால்டுவெல்** துரைமகனார், "தமிழ்மொழி பண்டையது; நலஞ்சிறந்தது; உயர் நிலையில் உள்ளது. இதைப்போன்ற திராவிட மொழி வேறெதுவும் இல்லை" என்றும், **G. U. போப்பு** என்னும் பெரியார் "தமிழ் எம்மொழிக்கும் இழிவானதன்று" என்றும், **சிலேட்டர்** பெருந்தகையார், "திராவிட மொழிகளுள், மக்கள் பேசும் மொழிக்கு உரிய தன்மையைப் பெற்றுள்ளது தமிழ்மொழியே; தர்க்க அமைப்பை உடையதும் தமிழ் மொழியே" என்றும், **மர்டாக்கு** என்ற அறிஞர் "அழகிய இலக்கியங்களைப் பொருந்தப் பெற்று விளங்குவது தமிழே" என்றும், **காந்திப்பெரியாரும்** தாம் எழுதிய சிறைச்சாலை அனுபவங்கள் என்னும் கட்டுரையில், "தமிழ் மொழியைக் கருத்தூன்றிக் கற்பதில் சென்ற மாதத்தைக் கழித்தேன்; எவ்வளவுக்குக் கற்றேனோ, அவ்வளவுக்கு அதன் அழகுகளை உணர்ந்தேன். அது விரும்பத்தக்கதும், இன்பமானதுமான மொழி. நான் கற்றதிலிருந்து தமிழர்கள் பண்பும், இன்றும் அறிவும், சாதுரியமும், ஞானமும் வாய்ந்தவர்கள் என்பதை அறிகிறேன். **பின்னும் இந்தியாவில் மக்கள் தொகுதி ஒன்றுகுமானால், தமிழ் நாட்டுக்குப் புறம்பே வாழும் மக்கள் தமிழ் அறிதல் வேண்டும்,"** என்றும் பலபடப் புகழ்ந்துள்ளார்கள்.

10. இத்தகைய மாண்பு வாய்ந்தமொழியைத் தமிழ் மாணவர்களாகிய நாம் கருத்தூன்றிக் கற்கவேண்டுவது நம் கடமைகளில் ஒன்றல்லவா? கற்றுப் பண்டைத் தமிழர் நாகரிகத்தை உணர்ந்து அவர்களை அடி ஒற்றி

நடக்க வேண்டுவதும் நமது பண்பல்லவா? அருமைத் தோழர்களே! நன்கு ஓர்ந்து கூறுங்கள். இன்னும் இதன் பெருமையைக் கூறிக்கொண்டே போனால் நீளும். ஆதலின், இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்,'' என்று கூறி முடித்தான். அவைத் தலைவர் சிறுவனைப் பாராட்டிப் பேசிய பின்பு கழகச் செயலாளர் நன்றி கூறக் கூட்டமும் இனிது கலைந்தது.

### அருஞ் சொற்கள் :

அரிது-கடினம், மாண் அவை-மாட்சிமை பொருந்திய சபை, மண்ணுறுத்தும்-அலங்கரிக்கும், கூற்று-வார்த்தை, திகழ-விளங்க, இணர்-இதழ், ஊழ்த்தும்-மலர்ந்தும், நாறு-வாசனை வீசா, மெய் விதிப்பார்-உடல் நடுங்குபவர், பூத்தலின்-உண்டாதலைவிட, ஐயம்-சந்தேகம், அம்பலம்-சபை, மகவு, குழவி-பிள்ளை, சால-மிகவும், மாருதம்-காற்று, பொலிவு-அழகு, கேளிர்-நண்பர், வரம்பு-எல்லை, பார்-பூமி, பசுஞானத்தால்-மக்கள் அறிவினால், பேர் அறிவே – பேர் ஒளியே என்பன சிவபெருமானை விளிக்கும் தொடர்கள், சிற்றறிவேற்கு-சின்ன புத்தியுடைய எனக்கு, அங்கயற்கண்-மீனாட்சியம்மையார், அணி-வரிசை.

### கேள்விகள்:

1. கற்றலைவிடச் சபையில் பேசுவது சிறந்தது என்பது எவ்வெவ்வாறு அறியக் கிடக்கிறது?
2. சபையில் பேசுவதற்கு முன்பு நாம் மேற்கொள்ள வேண்டிய முறைகள் யாவை?
3. பேசத் தொடங்குமுன் துவக்க வேண்டிய முறை யாது?
4. தமிழ் மொழி எவ்வெக் காரணங்களால் பெருமையுடையது?
5. தமிழ் மொழியின் சிறப்பை யார் யார் எம்முறையில் புகழ்ந்துள்ளனர்?

### பயிற்சி :

1. தமிழ் நாட்டு எல்லையைக் குறிப்பிடு.
2. தமிழரின் பெருமையை உணர்த்தும், "நீர் அறியும் நெருப்பறியும்" என்னும் தொடரில் அமைந்த வரலாற்றை எழுது.

3. "சொற்றமிழ் பாடுக" இடங்குறி.

4. தமிழின் பெருமையை உணர்தற்கு வேறு சான்றுகள் இரண்டினைக் கேட்டுக் குறிப்பிடு.

## இலக்கணம்:

## எண்ணுப் பெயர்ப்புணர்ச்சி

ஒன்று என்னும் எண் வருமொழியோடு புணர்கையில், ஈற்றுயிர் மெய் கெட்டு னகரம் ரகரமாகும். அதன்பின் உகரம் சேரும்.

(உ-ம்) ஒன்று + மாடு = ஒரு மாடு

ஒரு என்று இவ்வாறு விகாரப்பட்ட எண்ணுப் பெயர், வருமொழி முதலில் உயிர் வந்தால் முதல் நீண்டு ஈற்று உகரம் கெடும்.

(உ-ம்) ஒரு + ஆடு = ஓர் ஆடு

இரண்டு என்னும் எண்ணுப் பெயர், உகர உயிர் ரகர ஒற்றும் நிற்க, மற்றைய எழுத்துக்கள் எல்லாம் கெட, உகரச் சாரியை பெறும்.

(உ-ம்) இரண்டு + மாடுகள் = இரு மாடுகள்.

இரு என்னும் விகார எண்ணுப் பெயர், உயிர் வர முதல் நீண்டு உகரம் கெடும்.

(உ-ம்) இரு + ஆடுகள் = ஈராடுகள்.

மூன்று என்னும் எண், புணரும்போது உயிர் வந்தால் ஈற்றுயிர் மெய்யும் நகரமும் கெடும். மெய் வந்தால் முதல் குறுகி ஈறு கெட்டு, னகரம், வந்த மெய்யாக மாறும்.

(உ-ம்) மூன்று + ஆடுகள் = மூவாடுகள்.
மூன்று + காலம் = முக்காலம்.
மூன்று + நாடு = முந்நாடு.
மூன்று + வர்ணம் = முவ்வர்ணம்.

நான்கு என்னும் எண்ணுப்பெயர் ஈறு கெட்டு, னகரம் லகரமாகவும் றகரமாகவும், திரியும்.

நான்கு + ஆயிரம் = நாலாயிரம்
நான்கு + பலகை = நாற்பலகை

ஐந்து என்னும் எண்ணுப் பெயர் ஈறுகெட்டு, நகரம் வருமொழி மெய்யாக மாறும். அன்றி அதற்கு இனமாகத் திரிதலும், அன்றிக் கெடுதலும் உண்டு.

(உ-ம்) ஐந்து + முழம் = ஐம்முழம்
ஐந்து + காதம் = ஐங்காதம்
ஐந்து + ஆறு = ஐயாறு.

**பயிற்சி :**

1. ஒன்று + காடு, இரண்டு + நாடுகள் — இவற்றைப்புணர்த் திக் காட்டு. இப்படிப் புணர்த்தினமைக்குக் காரணமும் கூறு.
2. ஓராண்டு, ஈரணை-இவற்றைப் பிரித்துக் காட்டிப் புணர்ந் திருந்தமைக்குக் காரணமும் கூறு.
3. மூவாண்டு, முந்நாடு, முப்பொருள், மூவர்ணம்-இவற் றைப் பிரித்துக் காட்டிப் புணர்ந்துள்ளமைக்குக் காரண மும் கூறு.
4. நான்கு + ஆண்டுகள், நான்கு + கால்கள், — இவற்றைப் புணர்த்தி விதி கூறு.
5. ஐங்கரத்தான், ஐம்முகன், ஐயாண்டு-இவற்றைப் பிரித் துப் புணர்ந்தமைக்கு விதியும் எழுது.

# 2. சேக்கிழார்

1. தமிழ் நாட்டில் தலைசிறந்து விளங்கிய புலவர் பெருமக்களுள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்களுள் சேக்கி ழார் பெருமானுரும் ஒருவர். இவர் தெய்வப்புலவர் திருவள் ளுவர் போன்ற பெருமை சான்றவர். வள்ளுவரையும் வள்ளுவர் செய்த நூலையும் சிறப்பித்துக்கூறும் நூல், திருவள்ளுவமாலை என்பது. அதுபோலவே சேக்கிழாரை யும் சேக்கிழார் செய்த நூலையும் சிறப்பித்துக் கூறும் நூல், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்பது. இவ்வாறு புலவரையும் புலவர் செய்த நூலையும் கூறுதற்குரிய தனி நூல்களைப் பெறும் பேற்றினைத் தமிழ் நாட்டில் இவ்விரு புலவர்களைத் தவிர்த்து வேறு எந்தப் புலவர்களும் பெற் றிலர். ஏனைய புலவர்கள் யாவரும் தம்மையும் தம் நூலை யும் சிறப்பித்துக் கூறும் தனிப்பாடல்களைப் பெறும் பேறு மட்டும் பெற்றவர்கள். ஆனுல், திருவள்ளுவரும் சேக்கி

ழாருமே தனியன்களையும், தனி நூல்களையும் பெற்றவர் கள். இவ்விரு பெரியார்களுள் ஒருவரான சேக்கிழார் வரலாற்றைச் சிறிது இங்கு அறிவோமாக.

2. சேக்கிழார் இற்றைக்கு ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகட்கு முன் சென்னையை அடுத்துப் பதினான்கு கல் தொலைவில் உள்ள குன்றத்தூர் என்னும் கிராமத்தில், சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர். சேக்கிழார் என்பது சைவவேளாளர் மரபுகளில் ஒன்று. அம்மரபுக்கு ஒரு சிறப்பை, இவர் ஈந்த காரணத்தால், இவர் அம்மரபுப் பெயராலேயே குறிப்பிடப்பட்டார். இவருக்கு அருண் மொழித் தேவர் என்பது பிள்ளைத் திருநாமம். இவருடன் பிறந்த ஓர் இளவலும் இருந்தனர். அவர் பாலறுவாயர் என்று அழைக்கப்பட்டார். இப்பாலறுவாயர் வெட்டு வித்த குளமும் இன்று குன்றத்தூரில் தூர்ந்து போகாமல் காட்சி அளிப்பதைக் கண்டு களிக்கலாம். சேக்கிழார் தம் வந்தனை வழிபாட்டை ஆற்றி வந்த திருநாகேஸ்வரம் என்னும் திருக்கோயிலையும் அங்குக் கண்டு ஆனந்திக்க லாம்.

3. சேக்கிழார் இளமை முதற்கொண்ட கல்வி கேள்விகளில் தலை சிறந்து விளங்கித் தமிழில் உள்ள இலக்கண இலக்கியங்கள் யாவற்றையும் கற்றுத் தேர்ந் தனர். சமய நூல்களான தேவார திருவாசகப் பாடல் களிலும் இவருக்கு நல்ல பயிற்சி இருந்தது. இப்படி இவர் தம் குலத்தொழிலையும், அறிவுப் பெருக்கத்தை யும், அரன் பூசை நேசமும், அடியார் பக்தியும் கொண்டு குன்றத்தூரில் இனிது வாழ்ந்து வந்தனர். அறிவு ஏற ஏற, ஆண்டுகளும் ஏறி வர, நல்ல தோற்றப் பொலி வுடன் விளங்கி வந்தார்.

4. சேக்கிழார் காலத்தில் சோழ நாட்டை இரண்டாம் குலோத்துங்க மன்னன் நல்லரசு புரிந்து வந்தான். அவன் ஒரு நாள் அமைச்சர், தானைத்தலைவர், அவைப் புலவர்கள், மற்றும் பலர் புடைசூழத் திருவோலக்கம் கொண்டிருக்கையில், திடுமென ஔவையார் கூறியுள்ள ஒரு பாடலாகிய,

> வேழ முடைத்து மலைநாடு ; மேதக்க
> சோழ வளநாடு சோறுடைத்து;—பூழியர்கோன்
> தென்னாடு முத்துடைத்து ; தெண்ணீர் வயல்தொண்டை
> நன்னாடு சான்றோ ருடைத்து.

என்னும் பாடலை ஆராயத் தொடங்கினான். "தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து" என்னும் தொடர் அவன் கருத்தைப் பிணித்தது. அதன் உண்மையை உணர வேண்டும் என்பதற்காக, உடனே தொண்டை நாட்டு மண்டலீகருக்கு ஒரு ஓலை போக்கி, அதனுள் "மலையை விடப் பெரியது எது? கடலைவிடப் பெரியது எது? உலகைவிடப் பெரியது எது?" என்னும் வினாக்களைப் பொறித்து, ஆட்கள் மூலம் போக்கினான். இவ்வினாக்களை எழுதும்போதே அரசவையில் இருந்த புலவர்கள் சிலர், "மன்ன, இவ்வினாக்களுக்கு விடை காண்டல் அரிது. இவ்வாறிருக்க, நீ இத்தகைய வினாக்களை வினவலாமோ?" என்றும் கூறினர். அது கேட்ட மன்னன், "தொண்டை நாடு சான்றோர் பலரைப் பெற்றது உண்மையானால், அத் தொண்டை நாட்டுச் சான்றோர்கள் விடைகூறட்டுமே! அதன் பொருட்டுத்தானே இவ்வினாக்களை விடுக்கின்றேன்" என்றதும், புலவர்கள் அதற்குமேல் ஒன்றும் கூறாது வாளா இருந்தனர். வினாக்களும் தொண்டை நாட்டு மன்னன் கைப் புக்கன. இவ்வினாக்களைக் கண்ட தொண்

டை நாட்டு மன்னன் முதலில் திடுக்கிட்டுப் பின்னர், தன்னுட்டில் அறிவுத் துறையில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சேக்கிழார் பெருமானை அழைத்து விடை காணுமாறு வேண்டினன். சேக்கிழார் ஓலை நறுக்கினைக் கையில் கொண்டார். உடனே யாதொரு தட்டுத் தடங்கலும் இன்றி, ஒவ்வொரு வினவிற்கும் நேர் விடையாகத் தம் கூற்றுகக் கூறுவதினும், முன்னோர் கூற்றுக விடை இறுக்க எண்ணி, மூன்று குறட்பாக்களையே அம் மூன்று வினக்களுக்கு விடையாக எழுதிக் காட்டினர். அவையே,

1. நிலையிற் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

2. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

3. காலத்தினுல் செய்த உதவி சிறிதெனினும்
ஞானத்தின் மாணப் பெரிது.

என்பன.

5. இவ்விடையினைக் கண்ட தொண்டை நாட்டு வேந்தன் மகிழ்ந்து புலவர்பெருமானுக்குப் பரிசு பல ஈந்து, அவ்விடைத்தாளினைச் சோழ மன்னனுக்கு அனுப்பினுன். செம்பியர் பெருமான் இம்மூன்று விடைகளைக் கண்டு, அவை மிக மிகப் பொருத்த மாதலை உணர்ந்து, "தொண்டை நாடு சான்றோர் உடைத்து, என்பதில் எள்ளளவும் ஐயமின்று" என்பதை உளங்கொண்டு, இத் தகைய அறிவாற்றல் நிறைந்த புலவர் தமக்கு அமைச்சராக இருப்பின், சாலவும் நலந்தருமென, உளங்கொண்டு உடனே தொண்டையர் கோனுக்குத் திருமுகம் விடுத்துச் சேக்கிழாரை அனுப்பி வைக்குமாறு பணித்தான். இவ்

வேற்பாட்டின்படி சேக்கிழாரும் சோழநாட்டை அடைந்தனர். இரண்டாம் குலோத்துங்கனுன அனபாய சோழ மகாராசன் தான் எண்ணியபடியே சேக்கிழாரைத் தனக்கு முதல் அமைச்சராக அமர்த்திக்கொண்டு, **உத்தமச் சோழ பல்லவர்** என்னும் பட்டமும் ஈந்து பெருமைப் படுத்தினன். சேக்கிழார் பெருமானுரும் தம் அமைச்சுத் தொழிலைத் திறனுடன் ஆற்றி வந்தனர்.

6. அனபாயன் தன் அவையில் புலவர்களைக் கூட்டி, நல்ல காவியங்களைப் படித்து உரை கூறுமாறு கேட்டு, இன்பமாகப் பொழுது போக்கிக்கொண்டு வருவது வழக்கம். அவற்றுள் ஒன்று திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணி. சேக்கிழார் பெருமானுர் இருமைக்கும் நன்மை பயக்கும் நாயன்மார்களின் வரலாற்றைக் கூறி வரலாயினர். அவ்வரலாறுகள் அடியார் அன்பையும், ஆண்டவன் அருளையும் பெறுவதற்குத் துணை செய்ய வல்லனவாய் இருந்தமையால் மன்னன் அவ்வரலாறுகளைக் காவியமாகச் சேக்கிழாரையே எழுதித் தர வேண்டினன். இவரும் சோழ மன்னனிடம் விடை பெற்றுச் சிதம்பரத்தை அடைந்து, நடராசப் பெருமான் முன் நின்று, தாம் பாட இருக்கும் காவியத்திற்கு அடி எடுத்துக் கொடுக்க இரந்து வேண்டினுர். அப்பொழுது அசரீரியாக 'உலகெலாம்' என்னும் தொடர் எழுந்தது. அதனையே தம் நூலுக்குத் தொடக்க அடியாகக் கொண்டு நூலைப் பாடத் தொடங்கினுர். நூலும் ஓர் ஆண்டில் இனிது முடிந்தது. அரசன் சிதம்பரத்திற்கு வந்து நல்ல நாளில் நூலினைத் தொடங்கிப் பொருள் விரிக்குமாறு வேண்டச் சேக்கிழாரும் பொருள் கூறி முடித்தார்.



7. அரசன் மிகவும் ஆனந்தப் பரவசமுற்று, சேக்கிழாரையும் அவர் செய்த நூலையும் யானை மீதேற்றித் தானே தன் இரு கரங்களாலும் கவரி வீசித் திருவீதி உலா வந்து சேக்கிழாரைச் சிறப்பித்தனன். அவ்வமயம் இவரைப் புகழாதவர் இலர். "அடியார் சரித்திரங்களைப் பாடுதற்கு இவரை அன்றி, வேறு அருகர் அல்லர்" என்றும் கூறினர். அரசனும் இவருக்குத் **தொண்டர் சீர்பரவுவார்"** என்னும் திருப்பெயர் ஈந்து பெருமை பெற்றனன். இவர் அமைச்சுத் தொழிலை விடுத்து, ஆண்டவன் பணியில் ஈடுபடுமாறு வேண்டிக் கொண்டனன். சேக்கிழாரும் அவ்வாறே திருத்தில்லையம்பதியில் இறைவனை வழிபட்டுக் கொண்டு தம் காலத்தை இன்பமாகக் கழித்து வந்தனர்.

8. இத்தகைய பெரியார் பாடிய நூலே, இப்பொழுது **பெரிய புராணம்** என்னும் பெயருடன் வழங்கப்பட்டு வருகிறது. **தொண்டர் புராணம்** என்றும் இதனைக் கூறுவர். இந்நூலை எழுதி முடித்தற்குப் பெருந்துணையாக இருந்தவை சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியும், சைவத் திருமுறைகளும் ஆகும். இந்நூல் செம்பாகமான எளிய சொற்களால் அரிய பொருளைத் தன்னகத்தே கொண்டு திகழ்வது. இதனைப் படிப்பவர் பக்திப் பெருக்கைத் தடையின்றிப் பெறுவர். அம்முறையில் அன்பு கனியவும் பக்தி பெருகவும் இந்நூலைச் சேக்கிழார் பாடியுள்ளார். இதனால் அன்றோ, திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டக் கவிபாடிய வலவ" என்று சேக்கிழார் பெருமானரைப் புகழ்ந்து பேசியுள்ளார். இத்தகைய சீரிய நூலைக் கற்று இன்புற, நீங்கள் கருத்துக் கொள்வீர்களாக.

### அருஞ் சொற்கள்:

சான்றவர்-அறிவு நிறைந்தவர், பேறு-பாக்கியம், தனியன்கள்-ஒரு நூலை சிறப்பித்துக் கூறும் தனிப்பாடல்கள், அரன்-சிவபெருமான், வேழம்-யானை, மலைநாடு-சேரநாடு, பூழியர் கோன்-பாண்டியன், சான்றோர்-அறிஞர், ஓலை-கடிதம், கூற்றுல்-மொழியால், மாண-மிகவும், தூக்கார்-ஆராயாதவராய், ஞாலம்-உலகம், சாலவும்-மிகவும், அவை-சபை, அசரீரி-ஆகாய வாணி, நனி-மிகவும், வலவ-வல்லவனே.

### கேள்விகள்:

1. திருவள்ளுவர், சேக்கிழார் ஆகிய இவர்களைத் தனித் தனிப் புகழும் தனி நூல்கள் எவை?
2. சேக்கிழார் எங்கு எப்போது எவ்வரசன் காலத்தில் பிறந்தவர்?
3. இவர் எப்படிச் சோழ நாடு புக நேர்ந்தது.
4. அரசர் விடுத்த வினவும், அவற்றிற்குரிய விடைகளும் யாவை?
5. எவ்வெந் நாடுகள் எவ்வெச் சிறப்புடையன?
6. சேக்கிழாருக்கு அமைந்த பெயர்களும் அவற்றின் காரணமும் யாவை?
7. அரசன் சேக்கிழாரை எப்படிப் பெருமைப் படுத்தினன்?

### பயிற்சி:

1. திருவள்ளுவ மாலை, சேக்கிழார் பிள்ளைத் தமிழ், தனியன்கள் இவற்றைப் பற்றிச் சிறு குறிப்பு எழுது.
2. பெரிய புராணம் பாடத்துணையாய் இருந்த நூற்களைக் குறிப்பிடு.
3. பெரிய புராணச் சிறப்பைப் பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.

### இலக்கணம்:

## எண்ணுப் புணர்ச்சி (தொடர்ச்சி)

### (ஆறுமுதல் எட்டுவரை)

ஆறு என்னும் எண்ணுப் பெயர் புணரும்போது குறுகும் பின் இயல்பாக நிற்கும்

ஆறு + பதம் = அறுபதம்
ஆறு + முகம் = ஆறுமுகம்.

ஏழு என்னும் எண்ணுப்பெயர் உயிர்வரின், ஈற்று உகரம் கெடும்; அன்றி மெய்வரின் முதல் குறுகலும் உண்டு; குறுகாமையும் உண்டு.

ஏழு + ஆள் = ஏழாள்
ஏழு + பறவை = எழு பறவை
ஏழு + பக்கம் = ஏழு பக்கம்

எட்டு என்னும் எண்ணுப் பெயருடன் உயிரும் மெய்யும் முதலாக உடைய எண்ணுப் பெயர் வந்தால், ஈறு கெட்டு டகரம் ணகரமாகும். மற்றைய மெய்ம் முதற் பெயரும் உயிர் முதல் பெயரும் வந்தால் இயல்பாகும்.

எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்
எட்டு + நூறு = எண்ணூறு
எட்டு + குதிரை = எட்டுக்குதிரை

பயிற்சி:

1. ஆறு + பொருள்கள், ஆறு + நாள்கள், ஆறு + தலை — இவற்றை இயல்பாகவும், விகாரமாகவும் புணர்த்தி, அங்ஙனம் புணர்த்தினமைக்குக் காரணமும் கூறு.
2. ஏழ்நாள், எழுகடல், ஏழுமுகம் — இவற்றின் புணர்ச்சிக்குக் காரணம் கூறு.
3. எண்சாண், எண்மணம், எண்திசை—இவற்றைப் பிரித்தும் புணர்ந்துள்ளமைக்குரிய காரணங்களையும் விவரி.

# 3. காஞ்சிமா நகரம்

1. "முத்தி தரும் நகரேழுள் முக்கியமாம் காஞ்சி" என்பது நம் முன்னோர் கருத்து. இத்தகைய பெருமை வாய்ந்த நகரைப்பற்றி நாம் அறிந்து கொள்ளவேண்டியது நம்முடைய இன்றியமையாத கடமையுமாகும். காஞ்சிபுரம் பழமையான நகரங்களில் ஒன்று. இது செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒரு தலை சிறந்த நகரமாகும். எப்படி வஞ்சி, பூம்புகார், மதுரை நகரங்கள் சேர சோழ பாண்டியர்கட்கு முறையே தலைநகரமாக,

விளங்கினவோ, அதுபோலக் காஞ்சிமா நகரம் பல்லவ மன்னர்கட்குத் தலைநகரமாக விளங்கியது. சீன யாத்திரிகரான ஹுயான்சாங் 'இது திராவிடர்கள் தலைநகரம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

2. காஞ்சிபுரத்தில் பல சைவ வைஷ்ணவ திருக்கோயில்கள் உள்ளன. "இங்கு அடிக்கொரு கோவில் அடிக்கொரு குளம்" என்று அங்குள்ளவர் கூறுவதை நாம் உண்மை என்பதை, அங்குச் சென்று நேரில்கண்ட அளவில் அறிந்துகொள்ளலாம். "அங்கங்கே சிவமாகி நின்றார் தாமே" என அப்பர் சுவாமிகள் கூறியதற்கேற்ப எங்கும் சிவலிங்கங்கள் தோற்றம் அளித்துக் கொண்டிருக்கும். இத்தலம் சைவ சமயக் குரவர்களா



லும், வைஷ்ணவமதப் பேராசிரியர்களாலும் திருமுறைகளாலும், திவ்வியப் பிரபந்தங்களாலும் பாடப்பட்ட பெருமை வாய்ந்தது. இங்குள்ள ஏகாம்பரநாதர் எனப் பெயர் பெற்ற சிவலிங்கம், பிருதுவியாகிய மண்ணல்

அமைந்த லிங்கமாகும். இறைவர் மண், நீர், தீ, வளி, ஆகாயம் என ஐந்து வடிவங்களாகவும் உள்ளவர் என்பதற்கு அறிகுறியாக இங்குச் சிவபெருமான் பிருதிவி லிங்கமாக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

3. இந்த லிங்கத்திற்கு ஏகம்பன் என்னும் பெயருமுண்டு. முற்றுந்துறந்த முனிவரான பட்டினத்தடிகள் "கச்சியே கம்பனே" என்று கூறியதிலிருந்தும் இதனை உணரலாம். காஞ்சிபுரம் வேகவதியாற்றுக்கு மறு பெயராகிய கம்பை என்னும் நதிக்கரையில் அமைந்திருக்கிறது.

4. காஞ்சிபுரத்தில் கைலாசநாதர் கோவில் என்ற பெயருடைய ஓர் ஆலயம் உளது. இது ராஜசிம்ம பல்லவனால் கட்டப்பட்டது. ஆகவே, இதனை ராஜசிம்மேஸ்வரம் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இத்திருத்தளி மேற்குச் சாளுக்கிய மன்னனான **விக்கிரமாதித்தியன்** காஞ்சியைத் தாக்கிய காலத்தில், சில சீர்த்திருத்தங்கள் செய்யப்பட்டது.

5. மற்றும் பல சைவ ஆலயங்கள் அங்கு உள்ளன. அவை திருமேற்றளி, அநேக தங்காவதம், ஓணகாந்தன் தளி, கச்சபேஸ்வரர் ஆலயம், காமாட்சியம்மன் கோயில், குமரகோட்டம் முதலியன. தளி என்பது கோயில் என்னும் பொருளைத் தரும் ஓர் அருஞ் சொல்லாகும்.

6. வைணவர்கள் ஆலயமாகக் குறிப்பிடத் தக்கவை, திருப்பாடகம், திருத்தங்கா, அத்திபுயகரம், ஊரகம், அத்தியூர், பரமேஸ்வர விண்ணகரம் என்பன. இவ்வாலயங்கள் இப்பொழுது முறையே பாண்டவ பெருமாள் கோயில், விளக்கொளிப் பெருமாள் கோயில்,

அஷ்டபுயப் பெருமாள் ஆலயம், உலகளந்த பெருமாள் கோயில், வரதர் கோயில், வைகுந்தப்பெருமாள் கோயில் என்று அழைக்கப்படுகின்றன.

7. இவையே அன்றி, நிலாத்திங்கள் துண்டம், திருவெஃகா, (இதுவே சொன்ன வண்ணம் செய்த பெரு



மாள் கோயில) கார்வானம் முதலிய கோயில்களும் ஆண்டு உள்ளன.

8. அட்டபுயகரம் பல்லவமல்லனது மகனை வைர மேகப் பல்லவனுல் பெரிதும் பூசிக்கப்பட்டதாகத் திருமங்கையாழ்வார் தம் பெரிய திரு மொழியில் குறிப்

பிடுகிருர். இவரே பரமேஸ்வர விண்ணகரப் பாசுரங்களில் பல்லவ மல்லனுடைய வெற்றிகள் பலவற்றைச் சுட்டியுள்ளார். அவற்றுள் ஒன்று, பாண்டியன் ஒருவனை அவன் வென்றதாகும். இப்பரமேஸ்வர விண்ணகரம் பரமேஸ்வர விஷ்ணுகிரகம் என்னும் பெயரால் முதல் முதல் வழங்கப் பட்டது. இதனைக் கட்டியவன் பரமேஸ்வர பல்லவ மல்லனுவான்.

9. சின்ன காஞ்சியென முன்பு வழங்கப்பட்டு இப்பொழுது விஷ்ணு காஞ்சி என்று கூறப்படும் இடத்தில் அமைந்த பெருங்கோயிலே வரதர் கோயில் எனப்படும். இக்கோயில் பல கல்வெட்டுக்களை யுடையது. இவற்ருல் அக்கால ஒழுகலாறுகள் பலவற்றை அறியலாம்.

10. சைவ வைஷ்ணவ சமயங்கட்கு மட்டும் இசையால் திசைபோயது காஞ்சிமாநகரம் என்று சொல்லுதற்கில்லை. பௌத்தமதம் நிலைபெறுவதற்கும் இஃது இடந்தந்துள்ளது. புத்தப் பெருமான் இங்கு வந்து தம் மதக் கொள்கைகளைப் பல சொற்பொழிவுகளின் மூலம் பரப்பியுள்ளார். அதன் பயனுக அவர் பலரைப் பௌத்த மதத்தைப் பற்றுமாறும் செய்துள்ளார். பௌத்த மதக் கொள்கைகள் இங்கு அசோகரால் நாட்டப்பட்ட தூண்களில் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

11. இதுகாறும் கூறிவந்த காரணங்களால் காஞ்சிபுரம் தொன்றுதொட்டுப் பெருமைபெற்றுவரும் பெரும்பதி என்பது தெரிகிறது. இதனைப் பற்றிய குறிப்பு, பெரும்பாணுற்றுப்படை என்ற சங்க நூலிலும் கூறப்பட்டுள்ளது. இந்நூலின் காலம் மதுரையில் கடைச் சங்கம் இருந்த காலமாகும். அக்கடைச் சங்கம் இருந்த காலம் இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு

களுக்கு முன்பாகும். முன்பு கூறப்பட்ட சைவநாயன்மார்களும் ஆழ்வார்களும் இருந்த காலம் இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு என்று சரித்திர ஆசிரியர்கள் தடையின்றி ஒப்புக்கொள்ளும் உண்மையாகும். எனவே, இது பழம்பதி என்பதில் யாதோர் ஐயமும் இல்லை. ஆகவே, இதனை எல்லோரும் பார்க்கவேண்டியது இன்றியமையாதது.

12. காஞ்சிபுரத்தின் கோவில்களைக் காண்கின்ற போது, அக்கோவில்களின் சிற்பங்களால் நம் பண்டைக் காலத்து நாகரிகங்களை உணரலாம்; சிற்பிகளின் அறிவுத் திறனை வியக்கலாம்; வரதர் கோவிலில் கருங்கற்களாலேயே செய்யப்பட்ட சங்கிலிகள் தொங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். எத்துணை அறிவாற்றல் இருந்திருந்தால், அக் காலக் கல் தச்சர்கள் அவற்றைச் செய்திருக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அவை தனித்தனி வளையங்களாக இருந்தும், ஒன்றோடொன்று கோக்கப்பட்டுத் தனித்து எடுக்கமுடியாத நிலையில் உள்ளன. ஒரே கல்லில் அவை செய்யப்பட்டு இருக்கவேண்டும். கோபுரங்கள் பல நிலைகளைப் பெற்று மிக உயரிய தோற்றமுடையனவாய்க் காண்போர் கண்ணைக்கவரும் நிலையில் உள்ளன. வீதிகள் யாவும் அகன்று உள்ளன. **சர்வ தீர்த்தம்** என்பது ஒரு குளம். இது பெரிய கஞ்சிபுரமாகிய சிவகாஞ்சியில் உள்ளது. காஞ்சியில் நெசவாளர்கள் மிகுதி. இவர்கள் ஆடைகளை நெய்து தம் வாழ்க்கையினை நடத்தி வருகின்றனர். அதனால்தான் "காஞ்சிபுரத்திற்குச் சென்றால் காலாட்டிக் கொண்டு சாப்பிடலாம்," என்னும் முதுமொழியும் வழக்கத்தில் உள்ளது. புடவைகளுள் சில "காஞ்சிபுரப் புடவை" என்றும் பேர் பெற்றுள்ளன.

13. திருவிழாவிற்கும் இந்நகரம் பேர்போனது. ஏகாம்பரர் மாவடி சேவையும், வரதருடைய கருட சேவையும், காமாட்சியம்மனுடைய வெள்ளி இரத விழாவும் இக்கால மக்கள் ஆண்டுதோறும் கண்டுகளிக்கும் பெருவிழக்களாகும். அப்போது கூடும் கூட்டம் கண்கொண்டு காணத்தக்கப் பெருங் கூட்டமாகும். பிள்ளைகளே! இத்தகைய காஞ்சிமாநகரை ஒரு நாளைக்கேனும் சென்று கண்டுகளிப்பது உங்கள் கடமை அல்லவா?

### அருஞ்சொற்கள்:

முக்தி-மோட்சம், குரவர்-ஆசிரியர்கள், வளி-காற்று, தளி-கோவில், கோட்டம்-கோவில், வரை-மலை, உள்ளுவர்-நினைப்பர், ஏத்தும்-போற்றும், காமரு-அழகிய, பேணினேன்-போற்றினேன், இசையால்-புகழால், திசை போயது-எங்கும் அறியக் கிடப்பது, ஆற்றல்-வல்லமை.

### கேள்விகள்:

1. மூவேந்தர்கள் யாவர்? அவர்கட்குரிய தலை நகரங்கள் எவை?
2. ஏகம்பன் என்று பெயர் வரக் காரணம் யாது?
3. காஞ்சிபுரத்திற்கும் பல்லவர்கட்கும் பெருந் தொடர்பு உண்டு என்பது எப்படித் தெரிகிறது?
4. காஞ்சிபுரத்தில் பௌத்தர்கட்கும் இடம் இருந்தது என்பதை எப்படி உணரலாம்?
5. காஞ்சிபுரம் சரித்திர காலத்துக்குட்பட்டது என்பது எவ்வெவ்வாறு தெரிகிறது?

### பயிற்சி:

1. காஞ்சியில் காணக்கூடிய சைவ வைஷ்ணவக் கோயில்களைக் குறிப்பிடு.
2. சைவசமயக் குரவர்களின் பெயர்களை எழுது.

184804

3. பரமேஸ்வர விண்ணகரம், வெஃகா, சர்வதீர்த்தம், திருப்பாடகம், அத்தியூர் — ஒவ்வொன்றைப் பற்றியும் சிறு குறிப்பு எழுது.
4. காஞ்சிபுரத்தைப் போன்ற பழமையான வேறு ஓர் ஊரின் அருமை பெருமைகளைக் குறித்து [illegible] எழுது.

### இலக்கணம் :

## பத்து எண்ணும் எண்ணுப் புணர்ச்சி

பத்து என்னும் எண்ணுப் பெயரின் பின் ஒன்று, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு ஆகிய இவ்வேழ் எண்கள் வரின், ஈற்றுயிர் மெய் கெடும், இன் சாரியைத் தோன்றும்; இற்றுச் சாரியையும் தோன்றும்: ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர் வந்து கூடினாலும், இவ்விதியைப் பெறும்.

பத்து + ஒன்று = பதினொன்று, பதின் மூன்று, பதி நான்கு; பத்து + ஒன்று = பதிற்றொன்று, பதிற்றுமூன்று, பதிற்றுநான்கு என வரும், பத்து + ஆயிரம் = பதினாயிரம், பத்து + ஆயிரம் = பதிற்றாயிரம் இவ்வாறே ஏனையவற்றையும் புணர்த்திக் காண்க.

இரண்டு முதல் எட்டீறாகிய எண்களின் பின் பத்து என்னும், எண்வரின், பத்தின் இடையில் நின்ற தகரம் கெடும்.

| | |
|---|---|
| இரண்டு + பத்து = இருபது | இவ்வாறே ஏனையவற்றைக் |
| மூன்று + பத்து = முப்பது | காண்க. |

### பயிற்சி :

1. பத்து + ஐந்து, பத்து + ஆறு, பத்து + எட்டு — இவற்றுடன் இற்றுச் சாரியைப் புணரின் எவ்வாறு புணரும் ?
2. நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது-இவற்றைப் பிரித்துப் புணர்ந்தமைக்குக் காரணமும் கூறு.

# 4. மாணாக்கர்

1. மாணாக்கர், மாணவர் என்பன ஒரு பொருளையே குறிக்கும் சொற்களாம். ஆனால், முன்னுள்ள தொடர் மாட்சிமையுடைய நாவினைப் பெற்றவர் என்றும், பின்னுள்ள மொழி மாட்சிமையுடையவர் என்றும் பொருள்

தந்து நிற்கும். மாணவர்களுடைய பொறுப்பும் இலட்சணமும் மிகுதியாகும். மாணவர்களை முத்திறத்தவராக நம்முன்னோர் பிரித்துள்ளனர். அவர்கள் முதல், இடை, கடை மாணவர்கள் ஆவர்.

2. தலை மாணாக்கர் அன்னம், பசு ஆகிய இவ்விரண்டுடன் ஒப்பிட்டுக் கூறப்படுவர். அன்னம் பாலையும் நீரையும் கலந்து வைத்தபோது, தனக்குகந்த பாலைப் பருகி நீரைப் பிரிக்கும் இயல்புடையது. அதுபோலத் தலை மாணாக்கர்களும் ஆசிரியர் பலவற்றைக் கூறினாலும், அவற்றுள் தமக்குள் வேண்டியவற்றைமட்டும் தம் உள்ளத்தில் கொண்டு மற்றவற்றைத் தள்ளவேண்டுபவராவர். பசு, தான் உட்கொண்ட வைக்கோலையோ, புல்லையோ, விழுங்கிவிடாமல், ஓர் இடத்தில் அமர்ந்து, உண்டவற்றை மெல்ல மெல்ல மென்று, அசைபோட்டுப் பின்பே வயிற்றுக்குள் இடும் இயல்பு வாய்ந்தது. அதுபோலவே, தலை மாணவர்களும் ஆசிரியர்பால் கேட்டவற்றை முதலில் மனத்தில் கொண்டு, பின்பு ஓர் இடத்தில் அமர்ந்து, கேட்டவற்றை நன்கு சிந்தித்து மனத்தில் பதிய வைத்துக் கொள்ளுவர்.

3. இடை மாணாக்கர் பூமி, கிளிப்பிள்ளை ஆகிய இப்பொருள்களுக்கு நிகராகக் கூறப்படுவர். நிலம் உழுகின்ற அளவுக்குப் பயன் அளிக்கும். கிளி சொன்னவற்றை அப்படியே திருப்பிச் சொல்லும். இவற்றைப் போலவே இடை மாணாக்கர்கள் ஆசிரியர் எவ்வளவு கற்பித்துக் கொடுத்தனரோ, அவ்வளவுக்கே அறிவு பெற்றவர். சொல்லிக் கொடுத்த அளவிற்கே திருப்பிக் கூறுவர். தாமாக மேலும் மேலும் அறிவினைப் பெருகச் செய்ய வேண்டுமே என்னும் எண்ணமும் கொள்ளாதவர்கள்.

4. கடை மாணுக்கர்கள் ஓட்டைக்குடம், மேதி, ஆடு, நெய்யரி ஆகிய இப் பொருள்களோடு உவமிக்கப் படுவர். ஓட்டைக்குடத்தில் எவ்வளவு நீரைக்கொட்டி னுலும், நீர் தங்காமல் கீழே ஒழுகிப்போகும். ஆடு ஓர் இடத்தில் தன் வயிருரப் புல்லே மேயாது. எருமை நல்ல நீரில் இறங்காமல், சேற்று நீரில் இறங்கித் தன் உடல் முழுமையும் சேற்றைப் பூசிக்கொண்டு வரும். நெய்யரி என்பது பன்னுடை. இது கள்ளினே வடிகட்டுதற்குத் துணைசெய்யும் ஒரு தாவரப் பொருள். அதன் இடத்தில் ஊற்றப்படுகின்ற மதுவினைக் கீழே விட்டுவிட்டுச் சத்தை களைத் தன்னிடத்தில் நிறுத்திக் கொள்ளும். இவற்றைப் போலக் கடை மாணவர்கள் ஆசிரியர் எவ்வளவு கற்பித் தாலும் சில்லிக் குடத்தைப் போலக் கற்றவற்றை விட்டு விடுவர். ஆட்டைப்போல ஓர் ஆசிரியரை அடைந்து முறையாகப் பாடங்களைப் பயிலாது, பல ஆசிரியரை அடைந்து எங்கும் அறிவு நிரம்பப் பெருது திரிவர். ஆகவே, இவர்கட்கு ஆடு உவமையாயிற்று. குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசி வருவதுபோல் நல்லாசிரியரை அடையாமல் தீய ஆசிரியரை அடைந்து, உள்ள அறி வையும் இழந்து திரியும் மாணவர்கள் எருமைக்கு எடுத் துக்காட்டாயினர். ஆசிரியர் மனம் உவந்து கற்பிக்கும் பாடங்களை யெல்லாம் கைநெகிழவிட்டுப் பயன் அற்ற வற்றைப் பிடித்துக் கொள்வர் என்பதற்காக நெய்யரி இவர்கட்கு உவமையாகக் கூறப்பட்டது.

5. களியாட்டத்தில் களிப்போனும், சோம்பல் குணம் வாய்ந்தவனும், ஆசிரியர் குற்றங்கண்டபோது கூறும் மொழிகளைக்கேட்டு மனம்பொருத மான உணர்ச்சி யுடையோனும், திருட்டுக்குணம் பொருந்தியவனும், ஆசை மிகுதியும் கொண்டவனும், தூங்கும் இயல்பு

பெற்றவனும், பழைய நூல்களையும் படிக்க அஞ்சுபவனும், பாவச் செயல்களைப் புரிபவனும், அஞ்ச வேண்டிய வற்றிற்கு அஞ்சா நெஞ்சினனும், வஞ்சகனும் மாணவர் ஆதற்குத் தகுதியற்றவர்கள். இவர்கட்குப் பாடஞ் சொல்ல வேண்டா என முன்னோர்களும் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

6. நன் மாணவர்கள் நல்லறிவு பெற்றுத் திகழ வேண்டினால், நேரம் தவறாது ஆசிரியரை அடைந்து வழி பட்டு, அவர் குணங்கட்கு ஏற்பப் பழகி, அவர் குறிப்பின் படி ஒழுகி வரவேண்டும். ஆசிரியர் முன்சென்று நின்ற போது, அவர் 'இரு' என்றபோது இருத்தல் வேண்டும். 'போ' என்னும் போது போதல் வேண்டும். நீர் வேட்கை மிகுந்தவன், நீரைப் பருகுவதுபோல, ஆசிரியர் கூறும் பாடங்களைக் கூர்ந்து அவாவோடு கேட்டல் வேண்டும். சுவரில் எழுதப்பட்ட சித்திரம்போல அமரிக்கையாக இருந்து கேட்டவற்றை மறவாது உளத்து அமைத்துக் கொள்ளவேண்டும்.

7. இம் முறையில் இருந்து பாடம் பயின்றால் மட்டும்போதாது. தாம் படித்தவற்றிற்கும் நடை முறைக்கும் எவ்வளவு பொருத்தம் என்பதைக் கவனிக்க வேண்டும். கேட்ட பாடத்தை மறத்தல் கூடாது. தெரி யாதவற்றை மீண்டும் ஆசிரியரை அணுகி அமைதியுடன் கேட்டுத் தெளிதல் வேண்டும். தம்மையொத்த மாணவர் களோடு தாம் கற்றவற்றைக் குறித்து உசாவி, ஒருவர்க் கொருவர் தெரியாதனவற்றை விளக்கிக்கொள்ளவேண்டும். இங்ஙனம் ஒவ்வொரு மாணவரும் மேற்கொண்டால், அறிவு விசாலமாகும்.

8. ஆசிரியரிடத்தில் அன்பும் அச்சமும் உடையவராய், அவரை அகலாமலும் மிக நெருங்காமலும் நிழல் போல் தொடர்ந்து ஒழுகவேண்டும். அவர்க்கு உற்ற இடத்து உதவவேண்டும். "எழுத்தறி வித்தவன் இறைவனுகும்" என்னும் முதுமொழியை நோக்கும்போது, ஆசிரியர்கள் மாணவர்கட்குக் கடவுள் என்பது விளங்குகிறதல்லவா? பண்டைக் காலத்தில், முதல் முதல் படிக்கத் தொடங்கும்போது, "குரு வாழ்க, குருவே துணை" என்று கூறும்படி ஒவ்வொரு மாணவனையும் கூறச்செய்து எழுத்தைக் கற்பிக்கத் தொடங்குவார்கள் என்றால், அக்காலத்தில் குருவுக்கு எத்துணை உயர்வு தந்துள்ளனர் என்பதை உணர்ந்து கொள்க. ஆகவே, குருவினிடத்து என்றும் அன்பு கொள்க. இல்லையேல்,

ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனுய்ப் பிறந்தங் கோருகம்
பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே

என்று திருமூலர் கூறிய மொழிக்கு ஆளாக நேரிடும்.

அருஞ்சொற்கள் :

கிள்ளை-கிளி, மேதி-எருமை, நெய்யரி-பன்னாடை, மது-கள், உசாவி-கேட்டு, உற்ற இடத்து-துன்பம்வந்த காலத்து, சுணங்கன்-நாய், பார்-பூமி, கிருமி-பூச்சிகள்.

கேள்விகள்:

1. மூவின மாணவர்கட்குரிய உவமைப் பொருள்கள் எவை?
2. ஆசிரியரை அடைந்து பாடங்கேட்கும் முறை யாது?
3. யார் யார் மாணவர் ஆதற்குத் தகுதியற்றவர்கள்?
4. ஆசிரியரிடத்தில் நன் மாணவர் எப்படி ஒழுகல் வேண்டும்?
5. மாணவர் தம் அறிவைப் பெருக்கிக் கொள்ள யாது செய்ய வேண்டும்?

**பயிற்சி:**

1. மூவகை மாணவர்கட்கும் கொடுக்கப்பட்ட உவமைப் பொருத்தங்களைப் பொருத்திக் காட்டு.
2. திருமூலர் வரலாற்றைக் கேட்டு எழுது.
3. திருமூலர் கூறிய பாடற்பொருளைச் சுருக்கி எழுது.
4. மாணாக்கர் என்னும் பொருள் பற்றித் தமிழ்ச் சங்கத்தில் பேசக் குறித்துக் கொள்ள வேண்டிய குறிப்புக்களை எழுதிக்காட்டு.

**இலக்கணம் :**

## இருபது என்னும் எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி

இருபது முதல் எண்பது ஈருகிய எண்களின் பின், ஒன்று முதல் ஒன்பது எண்ணும் வந்தால், நிலைமொழி ஈற்றுக்கு அயலில் தகர மெய் தோன்றும்.

இருபது + ஒன்று = இருபத்தொன்று
எண்பது + இரண்டு = எண்பத்திரண்டு
} பிறவற்றையும் இப்படியே காண்க

இருபது முதல் எண்பதீருகிய எண்களின் பின்னும் எண்பதின் பின்னும் ஆயிரம் என்னும் எண்ணுப் பெயர் வந்தால் இடையில் இன் சாரியை தோன்றும்.

இருபது + ஆயிரம் = இருபதினாயிரம்
எண்பது + ஆயிரம் = எண்பதினாயிரம்
ஒன்பது + ஆயிரம் = ஒன்பதின் ஆயிரம் ஏனையவற்றை [யும் இங்ஙனமே காண்க.

**பயிற்சி:**

அறுபதினாயிரம், நாற்பதினாயிரம், ஐம்பதினாயிரம், முப்பத்தாறு, நாற்பத்தொன்பது, அறுபத்தேழு—இவற்றைப் பிரித்துப் புணர்ந்திருந்தமைக்குக் காரணமும் கூறு.

# 5. புளிக் குழம்பு

1. நாம் உண்ணும் அன்னம் பல பெயர்களையுடையது. அதனைச் சோறு, ஓதனம், ஓரை என்றும் கூறுவர். பாற்சோறு, ததியோதனம், புளியோரை முதலிய தொடர்களால் இச்சொற்கள் பயின்று வருவதை உணர்ந்து கொள்ளலாம். இங்கு இல்லறத்தினை இனிது நடத்திய ஒரு தமிழ்நாட்டுப் பெண் ஒருத்தி புளிக்குழம்பு செய்து தன் கணவனை உண்பித்து மகிழ்ந்த விதத்தினைக் காண்போமாக.

2. தமிழ் நாட்டு மாது ஒருத்தி, தனக்கு விருப்பமான தமிழ் மகனுக்கு வாழ்க்கைப் பட்டனள். தமிழ் மகள் பெருஞ்செல்வத்தில் பிறந்தவள். தன் இல்லத்தில் பல பணியாளர்களைக் கொண்டு வேலை வாங்குபவள். இத்தகைய சீரும் சிறப்புடனும் வாழ்ந்த மங்கை நல்லாள், தனியே குடித்தனம் நடத்த அமர்த்தப்பட்டனள். பண்டைத் தமிழ் மக்கள் தாம் எவ்வளவு செல்வத்தில் சிறக்க வாழ்ந்தாலும், மணமக்களின் பெற்றோர்கள் மணமக்களைத் தம் வீட்டில் இருந்து வாழ்வு நடத்தச் சம்மதிக்க மாட்டார்கள்.

3. கோவலன் கண்ணகியின் வாழ்க்கையிலிருந்து இதனை அறிந்து கொள்ளலாம். கோவலன் தந்தையார் மாசாத்து வணிகர் தம்மகன் தனித்து இல்லறத்தினை இனிது நடத்த மணிமாடம் மருங்கு அமைத்து அதில் வாழுமாறு ஏற்பாடு செய்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இந்த முறைக்கு இணங்க, தமிழ் மகனும் தமிழ் மகளும் தனித்ததொரு மனையில் இல்லறமாகிய நல்லறத்தை இனிது நடத்தி வரலாயினர்.

4. திருமணம் நடந்து பல திங்களும் கழிந்தில. சில மாதங்களே ஆயின. பெற்ருேர்கள் தம் அருமைத் திருமகள் எப்படி இருக்கின்ருள் என்பதை அடிக்கடி அறிந்து கொள்வதற்கு அவாவுறுவர் அன்ருே? சில நாட்கள் தாமே நேரில் சென்று கண்டின்புறுவர். சில நாட்களில் எவரையேனும் அனுப்பிப் பார்த்துவரச் செய்து கேட்டு மகிழ்வர். ஒரு நாள் நற்ருய் தன் மகட்குத் தோழியாக இருந்தவளை அனுப்பித் தன் மகள் மனையறம் போற்றும் நிலையை அறிந்துவர ஏவினுள். அவளும் அவ்வாறே சென்றனள்.



5. தன் அருமைத் தலைவியைக் கண்டு வரச் சென்றவள், தன் தலைவி தன் கொழுநனைப் போற்றும் முறையினையும், அட்டில் சமைத்து அன்புடன் அளிக்கும் அழகினையும் கண்டு, "தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்று

வள்ளுவர் கூறும் வாய் மொழிக்கு இவளே சிறந்த எடுத்துக் காட்டுப் போலும் என்று எண்ணி, உளம் மகிழ்ந்து சிலநாள் அங்குத் தங்கிப் பின், தம் தலைவியிடம் விடை பெற்றுத் திரும்பினாள்.

6. நற்றாய் தன் மகளைக் கண்டு வந்த சேடியை நோக்கி, "ஏதேனும் சிறப்பு உண்டோ?" என்று உசாவினாள். அப்போது அப்பாங்கி, "அம்மணீ! உன் திருமகளின் கற்பின் திறத்தை என்னென்று கழறுவேன்? 'அடிசிற் கினியாளே' என்று வள்ளுவர் தம் அருமை மனைவியாரை நோக்கி விளித்ததன் பொருளை நான் உன் திருமகள் நடத்தையில் இருந்துதான் அறிந்துகொண்டேன். ஒருநாள் உன் திருமகள் புளிக்குழம்பு கூட்டித் தன் கணவன் உண்டு களிக்க விரும்பினாள். தான் புக்க இடம் பிறந்த இடத்தைப் போலச் சிறந்த செல்வம் படைத்துப் பணிப்பெண்களை மிகுதியாகப் பெற்றிருந்தாலும், உன் மகள் தானே சமைத்துத் தன் கேள்வனை உண்பிக்க வேண்டும் என்னும் உறுதி கொண்டிருக்கிறாள்.

7. "அம்மா! உன் பெண்ணின் திருக்கரம் காந்தள் மலர்போலச் சிவந்து மென்மையோடு விளங்க வல்லது என்பதை நீ அறிந்திருக்கிறாய். அவள் கண்களோ குவளை மலர் போன்றவை; மை தீட்டப்பட்டவை. இவையும் உனக்குத் தெரிந்தவையே. அவள் செல்வனை மணந்த செல்வியாதலின், நல்ல மெல்லிய விலையுயர்ந்த ஆடையை உடுத்திக் கொண்டிருந்தாள். தயிர் இறுகிக் கட்டியாக இருந்தமையால், அதனை உடைத்து நீராக்கக் கருதித் தன் கையால் பிசைந்து கொண்டிருந்தாள். அந்தச் சமயம் அடுப்பில் வைக்கப்பட்ட இனியபுளிக் குழம்பு நன்கு பக்குவப்பட்டுப் பொங்கி வருவதை அறிந்து, உடனே தாளித்

தால்தான் குழம்பின் பதம் கெடாதிருக்கும் என்பதை உணர்ந்து, தயிரைப் பிசைந்து கொண்டிருந்த கையைக் கழுவாமல், அப்படியே விலையுயர்ந்த புடவையில் துடைத்துக் கொண்டு, தாளிப்பினது புகை தன் கண்களில் புகுவதையும் பாராமல் தாளித்துத் துழாவிச் சமைத்தனள்.''

8. இவ்வாறு நின் மகள் சமைத்து வைப்பதற்கும், வெளியே சென்ற அவள் மணாளன் வருவதற்கும் நேரம் சரியாக இருந்தது. "இலையைப் பரப்பினாள்; அன்னத்தை அள்ளி இலையில் இட்டனள்; புளிக்குழம்பையும் பெய்தனள். அக் குழம்பு சுவை நனியுடையதாய் இருந்தது. கணவனும், "இன்னமும் பெய்க; இன்னமும் பெய்க" என்று கேட்டு, உவந்து உண்டனன். இவ்வாறு தன் கணவர் தான் சமைத்த தீம்புளிப்பாகரை இனிதென உண்கின்றனரே என்பதை அறிய, அவள் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. இந்தக் காட்சியைக் கண்டு நான் பேருவகை பூத்தேன். இது யான் கண்ட காட்சி,'' எனக் கூறி முடித்தனள்.

9. இப்படித் தன் மகள் இல்லறத்தை இனிய முறையில் நடத்தி வருவதைக் கேட்ட நற்றாய், இன்பவாரிதியில் திளைத்து மகிழ்ந்தாள். இக்காட்சியினைக் கூடலூர்க் கிழார் என்னும் புலவர் பெருமானார், குறுந்தொகையில்:

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்**
**குவளை உண்கண் குய்ப்புகை கமழத்**
**தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதுஎனக் கணவன் உண்டலின்,**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.**

என்று செய்யுளாகப் பாடிக் காட்டினர்.

## அருஞ்சொற்கள் :

தம்பதிகள்-கணவனும், மனைவியும், மருங்கு-பக்கத்தே, திங்கள்-மாதம், மனையறம்-குடும்ப தருமம். கொழுநன்-கணவன், அட்டில்-உணவு, தற்கொண்டான்-தன்னைத் திருமணம் செய்து கொண்டவன், பேணி - போற்றி, தகை - பெருமை, சான்ற - அமைந்த, சொல்-புகழ், வாய்மொழி-உண்மையான வார்த்தை, எடுத்துக் காட்டு-உதாரணம், விடை-உத்தரவு, சேடி-தோழி, உசாவினுள்-கேட்டாள்: கழறுவேன்-கூறுவேன், கேள்வன்-கணவன், நனி-மிகுதி, பாகர்-குழம்பு, உவகை பூத்தேன்-மகிழ்ந்தேன், வாரிதி-கடல், முளி-கெட்டியான, கலிங்கம்-ஆடை, உண்கண்-மைபூசிய கண், குய்-தாளிப்பு, துழந்து-துழாவி, அட்ட-சமைத்த, தீம்-இனிய, ஒண்ணுதல்-ஒளியுள்ள நெற்றியுடைய பெண்.

## கேள்விகள்:

1. நம் முன்னோர் புதுத் தம்பதிகளை எப்படிப் பழக்கினர் ?
2. ஒரு பெண் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென வள்ளுவர் கூறுகிறார் ?
3. தமிழ் மகள் முகம் எதைக் கண்டு மலர்ந்தது ?
4. தமிழ் மகள் நடத்திய இல்லறச் சிறப்பினை யார் அழகுறப் பாடிக் காட்டினர் ?

## பயிற்சி:

1. சிலப்பதிகாரத்தோடு இணைந்த மற்றொரு காவியத்தைக் குறிப்பிடு.
2. கோவலன் கண்ணகியர் தனித்து வாழ்வு நடத்தியது போல வேறு ஒரு தம்பதிகள் தனித்து வாழ்ந்த வரலாறு இருப்பின், அதனைக் குறிப்பிடுக.

### இலக்கணம்:

## மேற்கோள் குறியும் இருபிறைக் குறியும்

நாம் பிறர் கூறிய சொற்களையும் தொடர்களையும், அப்படியே எடுத்து எழுதும்போது (" ") இவ்வாறு குறிகளை இட்டு எழுத வேண்டும். இக்குறிகளே மேற்கோள் குறிகள் எனப்படும்.

(உ-ம்) ஔவையார், "இயல்வது கரவேல்" என்று கூறியுள்ளார்;

ஆசிரியர் "நான் நாளை உன் தந்தையாரைக் காண்கிறேன்" என்று கூறினர்.

இருபிறைக் குறிகளை, ஒன்றைக் கூறும்போது அதன் விளக்கத்தின் பொருட்டு ஒரு சொல்லையோ தொடரையோ பக்கத்தில் எழுதினல், இரு சிறு பிறைச் சந்திரன் வடிவான குறிகட்கு இடையே அவற்றை அமைத்து எழுதவேண்டும்,

(உ-ம்) அவருக்கு ரூபாய் 100 (நூறு) கொடு.

நீதி மன்றம் (ஐக்கோர்ட்) எங்கு இருக்கிறது?

### பயிற்சி:

1. இப்பாடப் பகுதியினின்றும் மேற்கொள் குறிகள் அமைந்த வாக்கியங்கள் நான்கினை எடுத்துக் காட்டு.
2. இருபிறைக் குறி வாக்கியம் நான்கினை உதாரணமாகக் காட்டு.
3. மேற்கோள் குறி அமைந்த தொடர்கள் மூன்றினை நீங்களாக எழுதிக் காட்டுங்கள்.

# 6. கலிங்கப் போர்

1. தொண்டை நாட்டின் தலைசிறந்த நகரமாகிய காஞ்சிமா நகரின் தென்குட திசையின் சித்திர மண்டபத்தின் தரள நற்பந்தர்க்கீழ்ச் **சயதுங்க சோழ மன்னன்** தன் கோப்பெருந்தேவியோடு பெருஞ் சிறப்புடன் வீற்றிருந்த

னன். -அவன் அங்குத் திருவோலக்கம் கொண்டிருக்கையில், அவன் முன் ஆடலும் பாடலும் நடந்தன. இன்னிசை வீணையர் யாழினர் ஒருபாலும், தொழுகையரும், சென்னியில் அஞ்சலி கூப்பினரும் மற்றொரு பாலும் சூழ நின்றிருந்தனர். மாகதர் புகழ்ந்தனர். மாதர் மங்களம் பாடினர். முழவு கொட்டுவோர், தண்ணுமை தட்டுவோர் தம் கைத்திறனைக் காட்டி நின்றனர்.

2. இத்தகைய பெருஞ் சிறப்புடன் சயதுங்கசோழன் வீற்றிருக்கையில், வாயில் காப்போர் வந்தடிபணிந்து, "மண்டலாதிபரே! நும் பொன்னடி பணிந்து திறைப் பொருள் ஈயப் பல வேந்தர்கள் வாயிலில் காத்து நிற்கின்றனர். திருவுளம், 'வருக' எனப் பணிப்பின், அவர்களை உள்ளே அனுப்புகின்றோம்" என்று கை கட்டி வாய் பொத்திக் கூறினர். மன்னர் பிரானும், "அவர்களை ஒருவர் பின் ஒருவராக அனுப்புக" எனக் கட்டளையிட்டனன். அதுகாலைத் தென்னவர், வில்லவர், கங்கர், வங்கர், மராடர், சிங்களர், கொங்கணர், வடக்கர், துருக்கர் முதலான பல நாட்டு மன்னர்களும் நகரத் தலைவர்களும் வந்து செம்பியனது திருவடிகளை வணங்கித் தாம் கொணர்ந்த திறைப் பொருளான ஆரம், ஆடகம், நித்திலம், முதலானவற்றை ஈந்து நின்றனர். இவற்றை யெல்லாம் கண்ட மன்னர் பெருமான் மனம் மிக மகிழ்ந்து, முடி துளக்கி, வந்த, அரசர்கட்குத் தக்க முறையில் முகமன் கூறி விடுத்துத் தனி பக்கல் நின்ற அமைச்சரை நோக்கி, "இன்னமும் எவரேனும் வரி கொடாது இருக்கின்றனரோ?" என்று வினவினன். அதுபோது "வட கலிங்க வேந்தன் **சோடகங்கன்** இரு முறையும் தான் இறுக்கவேண்டிய திறைப் பொருளினைச் செலுத்திலன்" என அமைச்சர் கூறியதும், சோழ

மன்னன் வெகுண்டு, "அவனைப் பிடித்து என் கண்முன் கொணர்க!" என்று கட்டளை பிறப்பித்தனன். உடனே மன்னர் மருங்கிருந்த **கருணாகரத் தொண்டைமானாகிய** தானைத் தலைவன் தனக்கு அப்பணி இடப்பெறுமானால், கலிங்கனைக் கட்டிக் கொணர இயலும் என்று மன்னனை இரந்து வேண்டினன். அரசன் அவ்வாறே அவனுக்கு அப்பணியை இயற்றுமாறு பணித்தனன்.

3. கருணாகரத் தொண்டைமான் போர் என்றால் வீங்கும் பொலங்கொள் தோளினன் ஆதலின், உடனே வாரணம் ஊர்ந்து வடநாடு நோக்கி நாற்படையும் தன்னைச் சூழப் புறப்பட்டனன். இடையில் வரைகளையும் ஆறுகளையும் கடந்து கலிங்கத்தை யுற்றனன். உற்றவன் ஊரைச் சூரையாடினன்; தீக்கிரையாக்கினன்.

4. இவ்வாறு வேற்றரசன் படைகள் ஊரை நாசஞ் செய்தலைக் கண்ணுற்ற குடிமக்கள் கலக்கமுற்று, அலறிக் கொண்டு, உரை குழறி, உடல் பதறி, ஆடை அவிழக் கலிங்க மன்னன் கழலடி வீழ்ந்து வந்த காரணத்தைக் கழறினார்கள். குடி மக்களது முறையீட்டைச் செவி மடுத்த கலிங்க மன்னன் கலகல எனச் சிரித்து, "நம் நகரமும் நாடும் நால்வகை அரண்களைக் கொண்டது என் பதை இப் படைஞர் அறிந்திலரோ? யான் அபயனுக்கு அஞ்சுபவன் ஆதலால், அவன் படைக்கும் அஞ்சும் நெஞ் சினன் என்று உளங்கொண்டு நம் நாட்டை இத்தானை கள் தாக்குகின்றனவோ? நன்று, நன்று அவர்கள் ஆற் றல்!" எனச் சினக் குறிப்புத் தோன்ற நகைத்தனன்.

5. 'மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்' என் னும் முதுமொழிக் கிணங்கக் கலிங்க மன்னனை நோக்கி,

அவன் அமைச்சன் **எங்கராயன்,** " மன்னர் பெரும ! நம் நாட்டைத் தாக்குதற்கு விஜயதர மகாராசர் வரவேண்டுமோ ? அவனுடைய படைகளே, பல்வேறு இடங்களைப் போரிட்டுக் கைப் பற்றியுள்ளன. அவன் தண்டுக்கு ஆற்ருது தம் மண்டலங்களை இழந்த மண்டலீகர் பலர். நும் படையும் ஒருமுறை அவன் படையோடு எதிர்த்து, எதிர் நிற்க இயலாமல், பின்னிட்டதை நினைவு கூர்வீராக" என்று கூறினன். இம்மொழிகளைச் செவியேற்ற மன்னன் மந்திரியின்மீது சினங்கொண்டு, " ஏ! மந்திரக் கிழவோய்! என்ன கூறினை ? இத்தனை நாட்களாக என்னிடம் பழகியும் என் ஆற்றலை உணர்ந்தாய் இல்லையே. யானும் போரின்றி வாளா இருக்கின்றேன்" என்று கூறித் தன் தானைத் தலைவனை நோக்கி, " சேனுதிப ! நம் நால்வகைச் சேனைகளையும் ஆயத்தப் படுத்தி, எதிரிகளுடன் பொருமாறு ஏவுக !" என்று கட்டளையிட்டனன்.

6. இரு படைகளும் எதிர்த்தன. பரியொடு பரி பொருதது. இரு கடல் அலை ஒன்ருேடொன்று மலைவது போல இருந்தது. கரியொடு கரி முட்டியது. இக்காட்சி வரையொடு வரை எதிர்ப்பது போன்றிருந்தது. ஆழியுடன் ஆழி மோதியது ; இது முகிலுடன் முகில் எதிர்ப்பது போன்று காணப்பட்டது. புலியுடன் புலி பொருவது போல வீரருடன் வீரர் பொருதனர். வீரர் கண்களில் கனல் ஒளி பிறந்தது. சிலைகளிலிருந்து கணைகள் மழை போலச் சிந்தின. போர்க்களம் ஓர் ஆற்றின் தோற்றத்தை அளித்தது. வெட்டுண்ட யானைகளின் உடற்றுண்டங்கள் ஆற்றின் இரு மருங்கும் அமைந்த கரைபோல் இருந்தன. குருதி ஓட்டம் நீர் ஓட்டத்தை நிகர்த்து இருந்தது. சந்திர வட்டக் குடைகள் நீரின் நுரைபோல மிதந்தன. எதிரிகள் அம்பு விடுகையில், தம் கையில் எதிர் அம்பு விடு

தற்கு இல்லாத நிலையில் தம் மார்பில் பட்ட பகழியைப் பிடுங்கி எறிந்தனர் சில வீரர். தம் தொடைகள் வெட்டுண்டு கிடக்கத் தாம் கீழே விழுந்து கிடந்தாலும், அவற்றையும் வீசி எறிந்து பொருதனர் சில மறவர்.

7. இங்ஙனம் இருசார்த் தானைகளும் செரு செய்தன. ஆனால், பெருஞ் சேதம் கலிங்க நாட்டிற்கே ஏற்பட்டது. இதுகண்ட கலிங்க வீரர்கள் இனி நம்மால் இப்படையுடன் எதிர் நிற்க இயலாது என எண்ணித் தம்மைத் தாம் காத்துக்கொள்ள மலை முழையையும், கான் வழியையும் நாடினர். இதன்பின் கருணாகரத் தொண்டைமான், கலிங்க நாட்டின் நவநிதி, யானை, தேர், குதிரை, ஒட்டகம் முதலியவற்றைக் கைக் கொண்டான். இத்துடன் தன் நாடு நோக்கிப் புறப்படாவண்ணம் கலிங்க வேந்தனையும் கட்டிச் செல்ல அவன் கரந்த இடத்தையும் நாடுவானுனான். ஒற்றர்களை நாலுபக்கமும் ஏவினான். அவர்கள் கல் வரையும் கானகமும் துருவினர். இறுதியில், அவன் ஒரு மலைக்குகையில் மறைந்திருந்ததை உணர்ந்து அவனையும் கைப்பற்றினர்.

8. கலிங்க மன்னனைக் கைப்பற்றிக் கொண்டு வருகையில் உயிர் தப்பிய சில கலிங்க வீரர் அபயன் வீரரைக் கண்டு நடுங்கித் தம்மையும் கைதியாக்கி விடுவரோ? என்னும் அச்சத்தால் வில்லின் நாணை மடித்து முந்நூலாக்கித் தரித்து, "நாங்கள் கலிங்கர் அல்லேம். கங்கையில் நீராடப் போந்தவர்கள். தெரியாமல் இவ்வூர்க்குள் நுழைந்து விட்டோம்" எனக் கூறி உய்ந்து போயினர். சிலர் மொட்டை யடித்துக்கொண்டு, கொடிச் சீலையை இரத்தத்தில் தோய்த்து இடையில் அணிந்து கொண்டு, "ஐயா, நாங்கள் கலிங்கர் அல்லர்; எம் தோற்றத்தைக் கண்ட போதே நாங்கள் புத்தர்கள் என்பது உங்கட்குப் புலனாக

வில்லையோ?" என்று பொய் கூறிப் போயினர். சிலர் மாதங்கத்தின் கழுத்தில் கட்டப்பட்ட மணியினைக் கையிற் கொண்டு "ஐயா! நாங்கள் ஆந்திரத் தேசப் பாணர்கள். இவ்வூர் வாசியல்லோம்" என்று உளம் கூசிக் கூறி, உயிர் தப்பிப் போயினர். இவ்வாறு கலிங்க நாட்டை வென்று,

> கடற்கலிங்கம் எறிந்து சயத்தம்பம் நாட்டிக்
> கடகரியும் குவிதனமும் கவர்ந்து தெய்வச்
> சுடர்ப்படைவாள் அபயனடி அருளி னேடுஞ்
> சூடினன் வண்டையர்கோன் தொண்டை மானே.

அருஞ் சொற்கள்:

தென் குடதிசை-தென் மேற்குத்திசை, தரளம்-முத்து, திருவோலக்கம்-அத்தாணி மண்டபத்தில் சிறப்புடன் மன்னன் வீற்றிருக்கும் காட்சி, யாழ்-வீணையில் ஒருவகை, மாகதர்-இருந்து போற்றுவோர், முழவு, தண்ணுமை-மத்தள வகைகள், மண்டலாதிப-மன்ன! திறை-கப்பம், பொத்தி-மூடி, வில்லர்-சேரர், தென்னவர்-பாண்டியர், செம்பியன்-சோழன், நித்திலம்-முத்து, துளக்கி-அசைத்து, பொலம்-அழகு, வாரணம்-யானை, இவர்ந்து-ஏறி, வரை-மலை, அரண்-காவல், தானை, தண்டு-சேனை, பகழி-அம்பு, பரி-குதிரை, கரி-யானை, ஆழி-கடல், முகில்-மேகம், கணை-அம்பு, மருங்கு-பக்கம், மறவர்-வீரர், முழை-குகை, கரந்த-ஒளிந்த, மாதங்கம்-யானை, கடகரி-மதயானை.

கேள்விகள்:

1. ஏன் அபயன் கலிங்கரை எதிர்த்தான்?
2. கலிங்க நாட்டினின்று எவையெவை கைப்பற்றப் பட்டன?
3. உயிர் தப்பியோடின சிலர் சோழன் படையின் முன் அகப்பட்டபோது என்னென்ன கூறித் தப்பினர்?
4. கலிங்க மன்னன் அமைச்சரிடத்தில் எடுத்துக் கூறிய மொழிகள் யாவை?
5. போர்க்களம் எத்தோற்றத்தை அறிவித்தது?

**பயிற்சி :**

1. இருபடைகளும் பொருத காட்சியினைச் சுருக்கி எழுது.
2. யானை, அம்பு, முத்து இவற்றிற்குரிய வேறு சொற்களை எடுத்து எழுது.
3. இப்போரைக் கூறும் தமிழ் நூல் இன்னது என்பதைக் கேட்டு எழுது.

**இலக்கணம்:**

## அலகெழுத்துக்களாக எழுதுதல்

யாப்பிலக்கணம் என்பதும் ஓர் இலக்கணம். அது செய்யுளை எப்படி இயற்றுவது என்பதை அறிவிக்கும் ஒரு கருவி நூல். அதில் ஒரு பகுதி அசைபிரித்தல் என்பது. அதுவே அலகெழுத்துக்களாகப் பிரித்து எழுதல் எனவும்படும்.

(உ-ம்) திருவோணத்தான் = திரு + வோ + ணத் + தான்
மனோகரன் = மனோ + கரன்.

என்று இவ்வாறு அலகிட்டுப் பிரிக்க வேண்டும். முதலில் தனிக் குறிலாக நிற்கப் பிரிக்கக் கூடாது. தனிக்குறில் இறுதியில் நிற்கப் பிரிக்கலாம். தனிநெடிலாகவேனும், தனி நெடிலுடன் மெய் யெழுத்தைச் சேர்த்தேனும் இரு குறிலாகவேனும், இரு குறி லுடனும் மெய்யெழுத்தைச் சேர்த்தேனும், தனிக்குறிலும், தனிக் குறிலுடன் மெய்யையேனும் கூட்டியும், குறில், நெடிலாகவேனும், அக்குறில் நெடிலுடன், மெய்யைச் சேர்த்தேனும் பிரிக்கலாம்.

கற்கள் = கற் + கள் — தனிக்குறிலுடன் மெய்சேர்த்துப் பிரிக்கப்பட்டது.

கனவு = கன + வு — இரு குறிலாகவும் ஈற்றில் தனிக் குறிலாகவும் பிரிக்கப்பட்டது.

எனது = என + து — குறில் நெடிலாவும், ஈற்றில் தனிக்குறிலாகவும் பிரிக்கப்பட்டது.

பார்த்தனர் = பார்த் + தனர் — நெடிலோடு மெய்யாகவும், இருகுறிலுடன் மெய்யாகவும் பிரிக்கப்பட்டது.

**பயிற்சி:**

1. இப்பாடத்தின் முதல் பாராவில் உள்ள சொற்களுள் பத்தினை எடுத்து, அலகிட்டு எழுதிக் காட்டு.

2. கடற்கலிங்கம், எரிந்து, சயத்தம்பம், நாட்டிக், கடகரியும், குவிதனமும், கவர்ந்து, தெய்வச்சுடர், படைவாள், அபய னடி, அருளினேடுஞ், சூடினுன், வண்டையர்கோன், தொண்டை நாடு-இவற்றை அலகிட்டு எழுது.

# 7. நக்கீரர்

## ஒரு சிறு நாடகம்

### காட்சி 1

**இடம் :** மதுரை ஆலவாய்க் கோயில்.

**நேரம் :** முற்பகல்.

**நடிகன் :** தருமி. (ஓர் அந்தண இளைஞன்)

### கதைத் தொடர்ச்சி

மதுரைமாநகரில் அரசாண்ட வங்கிய சூடாமணி என்னும் பாண்டியன் தன் மனையாளுடன் நிலா முற்றத்தில் தென்றலங் குழவி மெல்லெனத் தவழ அமர்ந்திருக்கையில், திடுமென நறு மணம் தன் மூக்கினைத் துளைக்கப் பெருமகிழ்வெய்தி இம்மணம் தன் வாழ்க்கைத் துணைவியின் பூங்குழனின்று போந்தது என்பதை அறிந்து, "இது இவள் கூந்தலில் அமைந்த இயற்கை மணத்தால் எழுந்ததோ? அன்றி, மலர் பல சூடுதலினுல் அக் கூந்தல் செயற்கை மணம் பெற்றதோ?" என்னும் ஐயத்தனய், ஒரு பாலும் துணிவு பெருமல், அன்று இரவு பள்ளி கொண்ட பின், பிற்றை நாள், "என் உள்ளக்கிடக்கையை உணர்த்திச் செய்யுள் செய்யும் புலவர் இதனைப் பெறுக" என ஆயிரம் பொற்

காணம் நிறைந்த கிழியொன்றை முடிந்து செந்தமிழ்ச் சங்கத்தின் மண்டபத்தே கட்டித் தொங்க விட்டனன். இதனைப் பெறும் பொருட்டுப் பலரும் பலவாறு பாப் புனைந்து பார்த்திபனைக் கண்ட காலத்து, அப்பாக்கள் தென்னவன் உட்கருத்துக் கேற்றவாறு இல்லாமையால், பொற்கிழியும் எவரும் பெறுதற்கின்றி இருந்த இடத்திலேயே இருந்தது. இந்நிலையில் மதுரைப் பதி, பஞ்சத்தால் பரிதவித்தது. அதனை ஆற்ருத தருமி என்னும் அந்தணச் சிறுவன் வேற்றுத் தேயம் புகுந்து, பிழைக்க வழிதேட உறுதிகொண்டான்.

தருமி :—(ஆலவாய் அவிர்சடை அண்ணல் முன் நின்று) தாயின் அன்புடையாய்; இவண் உறில் இனிச் சாவேன்; தேயம் உய்வதற்கு ஏற்றது புகுந்து உறி இச் செழுமை ஆய பின்பு இவண் அடைகுவல். (வணங்குகிருன்)

ஆலவாய் அவிர்சடைக் கடவுள்:—(அசரீரியாக இருந்து)

அழுது அகங் குழையல் ; வாழி அன்ப ! ஒன்று அறைவல் [கேட்டி ;
வழுதி தூக்கினன் ஓர்பாத்தன் மனங்கொள இசைத்தோர்க் [கென்று ;
கிழியது ஆயிரம் பொன், சங்கக்கிளர் மணிமண்டபத்தே
அங்கதை இப்பா வேந்தற் கறைந்தனை பெறுதி.

[தருமி அசரீரியாக எழுந்த வார்த்தைகளைக் கேட்டு இன்பத்தில் திளைத்திருக்கையில், திடுமெனத் தன் கையில் பாட்டு எழுதப் பெற்ற ஓலை நறுக்கு ஒன்று வந்துற்றது. உடனே அதனைக் கொண்டு சென்று பாண்டியனுக்குப் படித்துக்காட்ட, அப்பாடற் பொருள் தன் கருத்துக்கு ஏற்றதாக இருக்கச்செழியர் பெருமான் பொற்கிழியினை எடுத்துக்கொள்ளுமாறு பணித்தனன். அக்கட்டளையினை மேற்கொண்ட தருமி, சங்கமண்டபம் வந்துற்றுப் பொற்கிழியினைக் கொள்ள முனைந்து நின்ருன். அந்நிலையில் சங்கப் புலவருள் தலைமை சான்ற நக்கீரர், "இப்பா குற்றமுடை

யது. ஆதலின், நீ பொன்பெறத் தகுதியற்றவன்" என்று கூறினர். அதனைக் கேட்ட தருமி ஒன்றும் மறுக்க இயலாதவனாகி, ஆலயத்தை அணுகினன்.]

## காட்சி 2

**இடம் :** மதுரை ஆலயம்.

**காலம் :** மாலை.

**நடிகன் :** தருமி.

**தருமி :**—(ஆலவாய் அண்ணலை நோக்கி)

வறுமைநோய் பிணிப்பப் பல்நாள் வழிபடும் அடியேன் [நின்பால்
பெறுபொருள் இழந்தேன் என்று பேசிலன்; யார்க்கும் [மேலாம்
கறைகெழு மிடற்றோய் ! நின்றன் கவிக்குற் றம்சில்வாழ் [நாள்சிற்
றறிவுடைப் புலவர் சொன்னால் ஆருனை மதிக்க வல்லர் ?
எந்தையிவ் இகழ்ச்சி நின்ன தல்லதை எனக்கியாது ?

(என்று கூறினன். இதைக் கேட்ட சிவபெருமான் புலவராகிச் சங்கத்தை நோக்கிப் புறப்பட்டார்.)

## காட்சி 3

**இடம் :** சங்கமண்டபம்.

**காலம் :** முற்பகல்.

**நடிகர் :** நக்கீரர். புலவர் வேடம் பூண்ட சிவபெருமான், தருமி, மற்றும் சில புலவர்கள்.

புலவர்ச் சிவபெருமான்:—

எம் கோட்டம் இக் கவிக்குக் குற்றம் காட்டியவர் யாவர் ?

நக்கீரர் :— 'நான்'

பு. சிவ:—

அங்கம் வளர்க்க அரிவாளில் நெய்தடவிப்
பங்கப் பட இரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்
'கீர்கீர்' என அறுக்கும் கீரனோ என்கவியைப்
பாரில் பழுதென் பவன் ?



நக்கீரர் :—

சங்கறுப்ப தெங்கள்குலம் ; சங்கரருக்கங் கேதுகுலம் ?
பங்கமுறச் சொன்னால் பழுதாமோ?—சங்கை
அரிதுண்டு வாழ்வோம்; அரனாரைப் போல
இரந்துண்டு வாழோம் இனி.

பு. சிவ :—குற்றம் யாது ! சொல்.

நக்கீரர் :—நெடுங்கண் நல்லார்.

சில்லிருங் குழற்கு நாற்றஞ் செயற்கையன் றியற்கை
யுண்டோ ?

இல்லது கூற லால்மற் றிதுகுற்றம்.

பு. சிவ :—மல்லல்விண் மகளிர் கூந்தல் மணம் இயல்
பன்றோ ?

நக்கீரர் :—அரம்பையர்க்கும் இருங்குழல் நறிய நாற்றம்
இன்று.

பு. சிவ :—இறைவி என்று உலகம் ஏத்தும்,
குன்றிறை பயந்த செல்வி கூந்தல் எற்று ?

நக்கீரர் :—அம்மை தனது கூந்தலும் அற்று.

(உடனே சிவபெருமான் கோபங்கொண்டு நெற்றிக்கண்ணையும் சடைமுடியையும் காட்டவும் அஞ்சாத நக்கீரர்) "கண்வடிவெலாம் காட்டினும் சாற்றிய செய்யுள் குற்றம் குற்றமே. சடை கொண்டு வெருட்டல் வேண்டா தோற்றிலன் இதனுக்கு" என்று கூறினர்.)

பு. சிவ:—(மிகவும் கோபங்கொண்டு)

எம்மொடு முரணி வாண்தோய் இமயமால் வரைப்பூங்
[கொம்பின்

மைம்மலி மறைசொல் ஆனு மணங்கமழ் குழல்பழித்த
செம்மைகொள் அறிவி லாய் ! நீ தீர்ப்பருங் குட்ட நோய்
[கொண்

டிம்மையில் அலேக.

நக்கீரர் :—(அஞ்சி இறைவனை வணங்கி)

கருணையங் கடலே! எந்தாய்!
இழிபுடை நாயின் அன்னேன் இலங்கறி விலாதுசெய்த
பிழை பொறுத் தருளிச் சாபப் பிணிகெட அருள்வாய்.

**பு. சிவ** :—(கோபந் தணிந்து)

கீர, சென்றி நீ கயிலை காணின் தீரும்இக் கொடு
[நோய்.

(சிவபெருமான் மறைந்தார். தருமி பொன்னைப் பெற்றான். நக்கீரர் தம் நோயைப் போக்கிக் கொள்ளக் கயிலை நோக்கிப் புறப்பட்டார். புறப்படுமுன் புலவர்களை விளித்தார்.)

**நக்கீரர்** :—நும்மோடு
உடனுறை வாழ்வு நீங்கும் ஒருபெரும் பாவியேனை
மடனறு நமரங் காள் நீர்! மறவன்மின்

**புலவர்கள்** :—(நக்கீரரைத் தழுவி அழுதுகொண்டே)

மேவரும் நின்னை நீத்து வெறுவியம் இருப்ப நின்ற
ஆவல்லல் வினையுளார்யாம் அல்லதிவ் வுலகத் தியாரே?

**நக்கீரர்** :—

குன்றனீர் சிறியற் காகக் குழைந்தழல்; தமியேன்
[செல்வல்
பொன்றலில் நட்பினுக்குப் புணர்வொடு பழகல்
[வேண்டா.
நின்றபில் உணர்ச்சி தானே நிறைக்குமென் றுணர்ந்த
[நல்லீர்!

(நக்கீரர் புறப்பட்டுப் போகையில் வாய்விட்டு)

என்றினி மதுரை காண்போம்? எப்பகல் சவுந்த ரேசன்
தன்திருவடிகள் காண்போம்? தாயையெஞ் ஞான்று
[காண்போம்.

வென்றிவேல் தருமவேந்தர் வேந்தனை எந்நாள்
[காண்போம் ?
ஒன்றுயிர்த் துணையாம் சங்கத் துறவை எப்பொழுது
[காண்போம் ?

[என்று கூறிக்கொண்டே வடபால் நோக்கிச் சென்றார். திருக்காளத்தி நாதரை வணங்கித் தம் நோய் நீங்கப் பெற்றார்.]

அருஞ் சொற்கள் :

தென்றலங்குழலி-இளந்தென்றல் காற்று, வாழ்க்கைத் துணைவி-மனைவி, காணம்-காசு, கிழி-முடிப்பு, பார்த்திபன்-அரசன், உறீஇ-அடைந்து, இவண்-இங்கு, அகம் குழையல்-மன வருத்தம் கொள்ளாதே, அறைவல்-சொல்வேன், வழுதி-பாண்டியன், தூக்கினன்-கட்டித் தொங்க விட்டுள்ளான், செழியர் பெருமான்—பாண்டியன், பிணிப்ப-கட்டுப் படுத்த, கறைகெழு-விஷம் பொருந்திய, மிடற்றோய்-கழுத்தையுடையோனே, கோட்டம்-குற்றம், அங்கம்-வயிறு, பார்-பூமி, அரனார்-சிவபெருமான், குழல்-கூந்தல், மல்லல்-வளப்பம், ஏத்தும்-போற்றும், குன்றிறை பயந்த செல்வி-மலையரசன்பெற்ற மகள் பார்வதி, எற்று-எத்தகையது, அற்று-அத்தகையது, முரணி-மாறுபட்டு, மால்வரை-பெரியமலை, மறை-வேதம், மடன்-அறியாமை, நமரங்காள்-நம்மவர்களே, வெறுவியம்-வீணர்களாய் உள்ளவர்.

கேள்விகள் :

1. வங்கிய சூடாமணிக்கு ஏற்பட்ட சந்தேகம் யாது ?
2. சிவபெருமான் ஏன் புலவர் வேடம் பூண்டார் ?
3. சிவபெருமானும் நக்கீரரும் எங்ஙனம் ஏசிப் பேசிக் கொண்டனர் ?
4. சிவபெருமானுக்கு ஏன் கோபம் எழுந்தது ?
5. நக்கீரர் பிரிந்துபோகையில் என்ன கூறிக்கொண்டே சென்றார் ?

பயிற்சி :

1. இந்நாடகத்தில் அமைந்த கதையினைச் சுருக்கி எழுது.
2. நக்கீரர் எழுதிய நூல் ஒன்றைக் கேட்டு எழுது.

## இலக்கணம் :

### அணிகள்

புலவர்கள் கவியைச் செய்யும்போது சொல் அழகு பல வற்றை உடன் கூட்டிச் செய்வார்கள். அம் முறை அணிபெற அமைத்தல் எனப்படும். அப்படி அழகு படுத்திக்கூறும் அணிகள் பலவாகும். அவற்றுள் தற்குறிப்பேற்ற அணி, உயர்வு நவிற்சி அணி, முரண் அணி ஆகிய மூன்று அணிகளை நீங்கள் இங்குப் பயில்வீர்களாக.

இயற்கையில் நிகழும் நிகழ்ச்சியோடு, புலவன் தன் குறிப்பை ஏற்றிக் காரணம் கற்பிப்பது **தற்குறிப்பு ஏற்ற அணியாகும்.**

(உ-ம்) "நாயகனைக் கண்டு முகமலர்ந்திருப்பதுபோலச் சூரியனைக் கண்டதும் தாமரைகள் மலர்ந்தன" என்று புலவன் கூறினால், இது தற்குறிப் பேற்ற அணி என்று கூறப்படும்.

தாமரை காலையில் மலருதல் இயற்கை. இங்குச் சூரியனைத் தாமரைக்கு நாயகனாக்கி, அவன் வருகையால் அது மலர்ந்தது எனக் கற்பித்துத் தன் குறிப்பை ஏற்றிக் கூறியதால், இது தற் குறிப்பேற்ற அணியாயிற்று.

இயற்கைக்கு மேலும் அதிகப்படி உயர்த்திக் கவி புனைவது **உயர்வு நவிற்சியணியாகும்.**

(உ-ம்) மாடத்தின்மீது பறக்கும் கொடிகள், ஆகாயத்தைத் முட்டுக் கொண்டிருந்தன. இங்குக் கொடிகள் மிகவும் உயரத் தில் பறந்து கொண்டிருந்தன என்பதைக்கூற ஆகாயத்தை முட் டிக்கொண்டு பறந்தன என்று கூறியது, **உயர்வு நவிற்சியணி யாகும்.**

ஒன்றுக்கொன்று எதிரிடையான செயல்களையோ, சொற் களையோ அமைத்துச் செய்யுள் செய்யப்பட்டிருப்பின், அது **முரண் அணியின்** பால்படும்.

(உ-ம்) தாமரை **மலர** அல்லி **குவிந்தது;** இங்கு ஒன்றுமலர்ந் தது, மற்றொன்று குவிந்தது எனக் கூறிய காரணத்தால் இது **முரண்** அணியாயிற்று.

## பயிற்சி :

1. வசனவடிவில் உயர்வு நவிற்சியணி, முரண் அணி, தற்குறிப் பேற்ற அணி ஆகிய இவற்றிற்குத் தனித்தனி இரண்டிரண்டு உதாரணம் கொடு.

2. "வாவுபரி தேர் ஏறி வாவென்று அழைப்பனபோல் கூவினவே கோழிக் குலம்" "வெண்ணீற்ருன் கருமிடற்ருன்" "வாடப் பசித்த வரி உழுவை வாலாட்டி மேடத்தைப் பார்த்துருமும் வேங்கடமே" இவை எந்தெந்த அணியின் பால்படும் என்பதைக் கேட்டு எழுது.

# செய்யுட் பகுதி

## I. வாழ்த்துப்பா

### தமிழ்த் தாய் வணக்கம்

மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்யப் [பெற்றே
அறைதரு பாடைய னைத்தையும் வென்று ரியத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுள்நினைந் தேத்தல் (செய்வாம்

—கருணைப்பிரகாசர்

**குறிப்புரை :**

கருணைப் பிரகாசர் காளத்திபுராணம் பாடிய மூன்று ஆசிரியர்களில் ஒருவர். காஞ்சிபுரத்தில் வீரசைவ மரபில் 18-ஆம் நூற்றுண்டில் பிறந்தவர். இப்பாடல் காளத்திப் புராணத்தில் உள்ளது.

**அருஞ்சொற்கள்:**

மறை-வேதம், மறை முதற் கிளந்த வாயான்-சிவபெருமான், மதி முகிழ்-பாலசந்திரன், வேணி-சடை, இலக்கணம்-இறையனுர் அகப்பொருள் என்னும் இலக்கண நூல், அறைதரு-சொல்லப்படும், பாடை-பாஷைகள், ஆரியம்-சமஸ்கிருதம், உறழ்தரு-ஒத்து விளங்கும்.

**கேள்விகள்:**

1. இறைவர் எப்போது, தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்தார் ?
2. 'மதி முகிழ் முடித்த வேணி'—இதில் அடங்கிய கதை யாது ?
3. எந்த விதத்தில் தமிழ் மொழி ஏனைய மொழிகளை வென்றதாகும்.

**பயிற்சி :**

காளத்திப் புராண ஆசிரியர் மூவர் பெயர்களையும் அறிந்து எழுது.

## II. நீதிப் பாக்கள்

### பழமொழி

#### இருமுறை பிழைசெயின் எவரும் பொறுக்கார்

முன்னும் ஒருகால் பிழைப்பினை ஆற்றவும்,
பின்னும் பிழைக்கப் பொறுப்பவோ? — இன்னிசை
யாழில்வண் டார்க்கும் புனலூர ! **ஈனுமோ**
**வாழை இருகால் குலை.** 1

#### சிறியோர் சிறப்புச் சிறவாது

பெரியோர்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல் — பொறிவண்டு
பூமேல் இசைமுரலும் ஊர ! அதுவன்றோ
**நாய்மேல் தவசிடு மாறு !** 2

#### பேதைக்கு அறிவு தோன்றாது

பூத்தாலும் காயா மரமுமுள ; மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர்; பாத்தி
புதைத்தாலும் நாறாத வித்துள; **பேதைக்**
**குரைத்தாலும் தோன்றா துணர்வு.** 3

#### நன்றி செய்தார்க்குக் கேடு தேடாதே

நாடி நமரென்று நன்குபுறந் தந்தாரைக்
கேடு பிறரோடு சூழ்தல், கிளர்மணி
நீடுகல் வெற்ப ! **நினைப்பின்றித் தாமிருந்த**
**கோடு குறைத்து விடல்.**

— முன்றுறையரையனார்.

## குறிப்புரை :

முன்றுறையரையனுர் கடைச் சங்ககாலப் புலவர். இவர் அரச மரபினர்; சமண மதத்தினர். இவர் பாடிய இந்நூலில் காணப்படும் ஒவ்வொரு பாட்டிலும் பழமொழி அமைந்து காணப் படுதலின், இந்நூல் இப்பெயர் பெற்றது.

## அருஞ் சொற்கள் :

1. யாழில்-வீணை ஒலிபோல, ஆர்க்கும்-ஒலிக்கும், புனலூர-நீர் வளப்பமுள்ள மருத நாட்டு மன்ன. 2. பேணி-போற்றி, பொறி-புள்ளிகள், முரலும்-ஒலிக்கும், தவிசு-மெத்தை. 3. நனி-மிகுதியும், நாருத-முளேக்காத. 4. புறந்தந்தார்-காப்பாற்றியவர், நமர்-நம் இனத்தவர், வெற்ப-மலேநாடாகிய குறிஞ்சி நாட்டு மன்ன, கோடு-கிளே, குறைத்து-வெட்டி.

## கேள்விகள் :

1. பேதைக்கு எவ்வளவு உரைத்தாலும் அறிவு தோன்ருது என்பதை எவ்வெவ் வுவமைகளால் ஆசிரியர் விளக்கி யுள்ளார் ?
2. எது நாய்மேல் தவிசிடுதலே ஒக்கும் ?
3. யாருக்குக் கேட்டினை நினைத்தல் கூடாது?

## பயிற்சி :

1. இந்நூற் பகுதியில் காணும் பழமொழிகளை எடுத்துக் காட்டு.
2. ஐவகை நிலங்களைக் குறிப்பிடு.
3. புனலூர, வெற்ப—இலக்கணக் குறிப்புத் தருக.

# சிறு பஞ்ச மூலம்

## நகைப்புக்கு இடமானவை

நாணிலான் சால்பும், நடையிலான் நன்ஞேன்பும்,
ஊணிலான் செய்யும் உதாரதையும்,—மாணிலான்
சேவகமும், செந்தமிழ் தேற்ருன் கவிசெயலும்,
நாவகமே நாடின் நகை. 1

## உண்மை உரைகள்

பெரிய குணர்த்தார்ச் சேர்மின்; பிறன்பொருள் [வெளவன்மின்
கருங்குணத்தார் கேண்மை கழிமின்; ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின்; வருங்காலன் திண்ணிதே;
வாய்சொல்லே அன்று வழக்கு. 2

## பெண்டிர் சிறப்பு

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து, சுற்றம்
வெருவாமை வீழ்ந்து விருந்தோம்பித்—திருவாக்கும்
தெய்வத்தை எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு. 3

## அரசன் உயர்வுக்கு அடிப்படை

வார்சான்ற கூந்தல்! வரப்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயரும்;—சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்;
ஓவா துரைக்கும் உலகு. 4

## கல்லாதவர் இழிவுபெறுவர்

பொன்பெறும் கற்ருன்; பொருள்பெறும் நற்கவி;
என்பெறும் வாதி? இசைபெறும்;—முன்பெறக்
கல்லார்க்கற் ருரினத்தர் அல்லார் பெறுபவே
நல்லார் இனத்து நகை. 5

—மாமூலஞர்

### குறிப்புரை :

சிறுபஞ்சமூலம் என்பன ஐந்து வேர்கள். அவை கண்டங் கத்தரி வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், நெருஞ்சி வேர், வழுதுணை வேர் என்பன. இவற்றின் கூட்டுச் சேர்க்கையாலான மருந்து நோய்கண்ட உடற்கு நன்மை தருவது. இதுபோல் இப் பெயரிய இந்நூலில் காணப்படும் வெண்பா ஒவ்வொன்றிலும் ஐந்து சீரிய நீதிகள் அமைந்து, மக்கள் நல்லொழுக்கம் கொள்ள வழிகாட்டுவனவாகும். இந்நூலாசிரியர் மாமூலனார். கடைச்சங்க காலப் புலவர்.

### அருஞ் சொற்கள் :

1. சால்பு-அமைதி, நடை-ஒழுக்கம், நோன்பு-தவ ஒழுக்கம், ஊண்-உணவு, மாண்-மாட்சிமை. 2. வழக்கு-ஒழுக்கம், கருங் குணத்தார்-தீயவர், கேண்மை-நட்பு, காலன்-இயமன், 3. வழக்கு-செலவு, வெருவாமை-அஞ்சாமற்படி, வீழ்ந்து-விரும்பி, ஓம்பி-உப சரித்து, தெய்வதை-தெய்வத்தை. 4. வார்சான்ற-நீட்சி நிறைந்த, கூந்தல்-கூந்தலுடைய பெண்ணே, வைகலும்-தினமும், தாவா-குறையா, கோ-அரசன், ஓவாது-இடைவிடாமல்.

### கேள்விகள் :

1. எவ்வெச் செயல்கள் பிறர் நகைப்புக்கு இடமானவை ?
2. எவையெவை ஒழுக்கமான குணங்கள் ?
3. பெண்டிற்கு இருக்கவேண்டிய குணங்கள் எவை ?
4. வரப்பு உயர்ந்தால் எவை எவை உயரும் ?

### பயிற்சி :

1. மகடூஉ முன்னிலைக்கு இப்பகுதியிலிருந்து ஓர் உதார ணம் காட்டு.
2. "வரப்பு உயர நீர் உயரும்" என்று வேறு எவரேனும் கூறியிருந்தால், அவர் பெயரைக் குறிப்பிட்டு அப்படிக் கூறிய சந்தர்ப்பத்தையும் குறிப்பிடு.

# III. சங்கநூற் பாக்கள்

## குணங்களின் இயல்பு

ஆற்றுதல் என்பதொன் றலர்ந்தார்க் காற்றுதல் ;
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை ;
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை ;
அறிவெனப் படுவது பேதையார்சொல் நோன்றல் ;
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை ;
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல். 1

—கலித்தொகை

## அவரவர் கடமை

ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே ;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே ;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே ;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே. 2

—புறநானூறு

## அறவுரை

தெய்வந் தெளிமின் ; தெளிந்தோர்ப் பேணுமின் ;
பொய்யுரை அஞ்சுமின் ; புறஞ்சொல் போற்றுமின் ;
செய்ந்நன்றி கொல்லன்மின் ; தீநட் பிகழ்மின் ;
பொய்க்கரி போகன்மின் ; பொருண்மொழி நீங்கன்மின் ;
அறமனை காமின் ; அல்லவை கடிமின் ;
செல்லுந் தேயத்துக் குறுதுணை தேடுமின். 3

– சிலப்பதிகாரம்

## செங்கோன்மை

கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும் ;
கோணிலை திரிந்திடில் மாரிவறங் கூரும் ;
மாரி வறங்கூரின் மன்னுயி ரில்லை;
மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்னும் தகுதியின் றாகும். 4

—மணிமேகலை

### குறிப்புரை :

1. இப்பாடல் கலித்தொகை என்னும் சங்க நூலில் நெய்தல் கலிப்பகுதியில் நல்லந்துவனரால் பாடப்பட்டது. இவர் கடைச் சங்க காலப் புலவர். அலந்தார்-துன்புற்றவர், கிளை-உறவினர், செரு அமை-வெறுக்காதிருத்தல்,நோன்றல்-பொறுத்தல், செறிவு-அடங்குதல், பொறை-பொறுமை.

2. இதனைப் பாடியவர் பொன்முடியார் என்னும் பெண்பாற் புலவர். இவர் காலம் சடைச்சங்க காலம். புறந்தருதல்-பாது காத்தல், சமர்-சண்டை, களிறு-யானை, காளை-வீரமகன்.

3. இதனைப் பாடியவர் இளங்கோ அடிகள். சேரர் குலத்த வர். சைன சமயத்தவர். இவர் காலம் கடைச்சங்க காலம். பேணுமின்-போற்றுங்கள், போற்றுமின்-சொல்லாதிருக்கப் பார்த் துக் கொள்ளுங்கள், கரி-சாட்சி, அல்லவை-தீயசெயல்கள்.

4. இதனைப் பாடியவர் சீத்தலைச் சாத்தனார் என்னும் பௌத்த சமயப் புலவர். சடைச் சங்க காலத்தவர். சீத்தலை என்னும் ஊரினர். கோள்-கிரகங்கள், கோன்-அரசன், வறங் கூரும்-வரட்சி மிகும்.

### கேள்விகள் :

1. பெற்றோர், அரசர், கொல்லன் ஆகிய இவர்களின் கட மைகள் யாவை ?
2. இளங்கோவடிகள் எவ்வகைக் குணங்களை மேற்கொள்ள வற்புறுத்துகிறார் ?
3. கொடுங்கோன்மையினால் ஏற்படும் கொடுமைகள் எவை?

**பயிற்சி :**

1. ஆற்றுதல், போற்றுதல், அன்பு, செறிவு, அறிவு, பொறை—இவற்றின் தன்மைகளை விளக்கிக் கூறு.
2. "ஈன்று புறந்தருதல்" என்னும் பாட்டினின்றும் பெண்பாற்புலவர்தாம் இதைப் பாடினுர் என்பதற்குரிய குறிப்பு இருப்பின், அதனை எடுத்துக் காட்டு.
3. பிரித்துக் காட்டு : என்றலை, கோனிலை, கோணிலை.

# IV. கதைப் பகுதி

## வில்லிபுத்தூரார் பாரதம்

## கிருஷ்ணன் தூது

### திரௌபதி கிருஷ்ணன் காலில் விழுந்து முறையிடல்

"தருமனுக்குங் கருத்திதுவே தமருடன்போர் புரியாமல்
இருநிலத்தி லுடன்வாழ்த லெனக்குநினை" வென்றுரைத்
[தான் ;
வரிமலர்க்கண் புனல்சோர, மலர்மலர்ந்த குழல்சோர,
விரைமலர்ச்செஞ் சேவடிக்கீழ் வீழ்ந்தழுதாள் மின்னனை
[யாள். 1

"மன்றி லழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பால்
சென்று தமக்கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தால்,
அன்று விரித்த வருங்கூந்தல் வல்வினையேன்,
என்று முடிப்பதினி? யெம்பெருமா னே!"யென்றுள். 2

### சாத்தகி கூறல்

"சண்டமுகி லுருமனைய சராசந்தன் றனக்கஞ்சி
வண்டுவரை யரணுக, வடமதுரை கைவிட்ட
திண்டிறன்மா தவன்மதியோ? திகழ்தருமன்
[றன்மதியோ?
பண்டுமவர் கருத்தறிந்து பார்போய்வேண் டுவா" தென்
[ருன். 3

## கிருஷ்ணன் வார்த்தை

"சாத்தகிநின் றிவையுரைப்பச் சடைக்குழலா ளழுத
[ரற்றக்
கோத்தருமன் முதலாய குலவேந்த ரைவரையும்
பார்த்தருளி யருள்பொழியும் பங்கயக்க ணெடுமாலும்,
ஏத்தரிய பெருங்கற்பி னிளையாளுக் கிவையுரைப்பான். 4

"தொல்லாண்மைப் பாண்டவர்க்குத் தூதுபோய்
[மீண்டதற்பின்
நல்லாயுன் பைங்கூந்த ஞனேமு டிக்கின்றேன் ;
எல்லாருங் காணவினி விரிப்ப தெண்ணரிய
புல்லார்தம் மந்தபுர மாந்தர் பூங்குழலே. 5

## மந்திராலோசனை சபையில் வரத்தகாதவர்கள்

"துன்று பிணியோர் துறந்தோர் அடங்காதவர்
கன்று சினமனத்தோர் கல்லா தவரிளையோர்
ஒன்று முறைமை யுணரா தவர்மகளிர்
என்றுமிவர் மந்தணத்தின் எய்தப் பெருதாரே. 6

## கிருஷ்ணன் அஸ்தினபுரம் நோக்கிப் புறப்படுதல்

என்னக் கழறி இருந்தோ ருரைதவிர்த்து,
"நின்னைப் பவரில்லாய் ! நீயே" கெனஉரைப்ப,
மன்னர்க்கு மன்னவன்பால் மாயோனுந் தூதாகப்
பொன்னுற்ற நேமிப் பொருபரித்தேர்மேற்கொண்டான். 7

## கிருஷ்ணன் அஸ்தினபுரம் காணல்

கல்வரையும் பாலைக் கடுஞ்சுரமும் கான்யாறும்
நல்வரையும் நீர்நாடு நாளிரண்டிற் சென்றருளித்
தொல்வரை கோபுரமு நீண்மதிலுஞ் சூழ்ந்திலங்கும்
மல்வரை தோளான் வளமா நகர்கண்டான். 8

## வேறு

## கிருஷ்ணன் சோலையில் தங்குதல்

என்றி சைக்குநல் லொளிநிமி ரெழில்மணி மகுடக்
குன்றி சைக்கும்வண் கோபுர நீணகர் குறுகித்
தென்றி சைக்குளிர் சண்பக மலர்தொருஞ் சிதைத்தேன்
நின்றி சைகும்வண் சோலைவா யமர்ந்தன னெடுமால். 9

## கிருஷ்ணன் வருகையைத் துரியோதனன் அறிதல்

"அன்று தூதுகொண் டிலங்கைதீ விளைத்தவ ரைவர்க்
கின்று தூதுவந் தெயிற்புறத் திருத்தன" ரென்னுத்
துன்று தூதுவண் டினமுர றொடையலான் றனக்குச்
சென்று தூதுவ ரியம்பினர் சேவடி வணங்கி. 10

—வில்லிபுத்தூரார்

### குறிப்புரை :

ஆசிரியர் வில்லிபுத்தூரார் சனியூரில், வைஷ்ணவ பிராமணர் குலத்தில் 500 ஆண்டுகட்கு முன் தோன்றியவர். இவரை ஆதரித்தவன் வக்கபாகை வரபதியாட்கொண்டான் என்பவன். அவன் வேண்டுகோட் கிணங்க இந்நூலைப் பாடினுர்.

### அருஞ் சொற்கள் :

1. தமர்-உறவினர், புனல்-நீர், குழல்-கூந்தல், விரை-வாசனை 2. மன்றில்-ராசசபை, மாசளித்த மன்னவன்-துரியோதனன், திறல் வீரர்-பஞ்சபாண்டவர். 3. சண்டமுகில்-பெருமேகம், உரும்-இடி, துவரை-துவாரகாபுரி, அரண்-பாதுகாவல், மதி-அறிவு, பார்-பூமி. பங்கயம்-தாமரை. 5. புல்லார்-பகைவர் (கௌரவர்). 6. மந்தணம்-இரகசிய ஆலோசனை சபை. 7. நேமி-சக்கரம், பரி-குதிரை 8. வரை-மலை, சுரம்-பாலைவனம், மாநகர்-அஸ்திஞபுரம். 9. எழில்-அழகு. 10. அன்று-இராம அவதார காலத்தில், எயில் புறம்-கோட்டை மதிலுக்கு வெளியில், தொடையலான்-மாலை யணிந்த துரியோதனன்.

**கேள்விகள் :**

1. திரௌபதி என்ன கூறி அழுது அரற்றினள் ?
2. சாத்தகி கூறியது யாது ?
3. யார் யார் இரகசிய ஆலோசனை சபைக்கு வருதல் கூடாது ?
4. தூதுவர் கிருஷ்ணன் வருகையை எவ்வாறு துரியனுக்கு மொழிந்தனர் ?

**பயிற்சி :**

1. சாத்தகி குறிப்பிட்ட வரலாற்றை எழுது.
2. கிருஷ்ணன் அத்தினபுரம் அடைந்த முறையை எழுது.
3. பிரித்துக் காட்டு :—வண்டுவரை, திண்டிறல்.

# சீறாப் புராணம்

## புலி வாழ்ந்த இடம்

நிகழுந் தாரையில் காவதத் துள்ளுறை நெடுநீர்
அகழி போன்றவோர் தடமுண்; டதனினுக் கணித்தாய்
புகலுதற் கரிய அடவியுண் ; டவ்வழிப் பொருந்தி
உகளு மாங்கொரு பாதகக் கொடுவரி உழுவை. 1

## புலி செருக்குடன் உருமுதல்

நிரம்பும் வள்ளுகிர் மடங்கலின் இனங்களின் நிணமுண்
டிரும்ப னைக்கையும் மதகரிக் கோட்டினை ஈர்த்திட்
டிரம்பி ளந்துதி ரங்களை மாந்திநின் றுறங்கா
தரும்பெ ருங்கிரி பிதிர்ந்திட உருமினும் அலரும். 2

## புலியின் முழக்கங் கேட்டு விலங்குகள் அஞ்சுதல்

அதிர்ந்தி டுந்தொனி செவியுற அடவியில் அடைந்த
முதிர்ந்த மேதியும் கவையடிக் கேழலும் முழுதும்

பொதிந்த மெய்ம்மயிர் எண்கினங் களும்மரைப் போத்தும்
பதிந்த கால்தடு மாறிட வீழ்ந்துடல் பதைக்கும். 3

## புலி முகம்மதுவைக் காணல்

மாதி ரத்துறை கேசரி நிகர்முகம் மதுதம்
பூத ரப்புயம் அசைதரப் புளகிதத் தோடும்
காது செங்கதிர் வேல்வலக் கரத்திடைக் கவின,
வீதி வாய்வரக் கண்டது பொருவரி வேங்கை. 4

## புலி முகம்மதை வணங்கல்

கண்ட போதினில் வால் குழைத்துஅரியமெய் கலங்கிக்
கொண்டு மெல்லென நடந்துதன் பெருஞ்சிரங் குனிந்து
தண்தளிர்ப்பத தரிசனக் கெனச்சலாம் உரைத்துத்
தண்ட னிட்டது வள்ளுகிர்த் திண்திறல் புலியே. 5

## முகம்மது புலியைத் தடவிக் கொடுத்தல்

வந்து தண்டனிட் டெழுந்து வாய்புதைத் துறவணங்கிப்
புந்தி கூர்தரப் போற்றிய வள்ளுகிர்ப் புலியை
மந்தராசல முகம்மது நனிமனம் மகிழ்ந்து
சந்தமென்மணிக் கரத்தினுல் சிரமுகம் தடவி. 6

## முகம்மது இட்ட கட்டளை

" இன்று தொட்டிவண் நெறியினில் உயிர்செகுத் திடுவ
தன்று ; வேறொரு காட்டினில் புகுக"என் றறைந்த
மன்றல் துன்றிய முகம்மதின் மலரடி வணங்கி,
" நன்று நன் "றெனப் போற்றியே நடந்தது வேங்கை. 7

—உமறுப்புலவர்.

### குறிப்புரை :

உமறுப் புலவர் முஸ்லீம் மதத்தைச் சார்ந்தவர். இராமநாத புரத்தைச் சார்ந்த கீழைக் கரையில் பிறந்தவர். இவர்காலத்து வள்ளல் சீதக்காதி என்பவர்; இவர் காலம் கி. பி. 17-ஆம் நூற்ருண்டு. இவர் பாடிய புராணம் சீருப்புராணம். அந்நூலிலிருந்து எடுக்கப்பட்ட பாடல்களே இவைகள்.

### அருஞ் சொற்கள் :

1. தாரை-வழி, காவதம்-பத்துமைல் தொலைவு, தடம்-குளம், அணித்து-அருகே, புகலுதற்கு-சொல்லுதற்கு, அடவி-காடு, உகளும்-திரியும், கொடுவரி-வளைந்தகோடு, உழுவை-புலி. 2. வள்ளுகிர்-கூரிய நகங்கள், மடங்கல்-சிங்கம், நிணம்-தசை, இரும்பணைக்கை-பெரிய பருத்த தும்பிக்கை, கரி-யானை, மும்மதம்-கன்னமதம், கபாலமதம், பீஜமதம், கோடு-தந்தம், ஈர்ந்திட்டு-பிளந்திட்டு, உரம்-மார்பு, மாந்தி-குடித்து, கிரி-மலை, பிதிர்ந்திட-பொடியாக, உருமினும்-இடியைவிட. 3. மேதி-எருமை, கவை-பிளவுபட்ட, கேழல்-பன்றி, பொதிந்த-நிரம்பிய, எண்கு-கரடி, மரைப்போத்து-ஆண்மான். 4. மாதிரத்து-திசைகளில், உறை-வாழும், கேசரி-சிங்கம், பூதரம்-மலைபோன்ற, புளகிதம்-பூரிப்புடன், காது-அழிக்கும், கவின-அழகுடன் விளங்க. 5. குழைத்து-அசைத்து. 6. புந்தி-புத்தி, 7. கூர்தர-மிக, மந்தராசலம்-மந்தர மலை, சந்தம்-அழகிய. இவண்-இங்கு, நெறி-வழி. செகுத்திடுவது-அழிப்பது. அறைந்த-சொன்ன, மன்றல்-வாசனை, துன்றிய-நிறைந்த.

### கேள்விகள் :

1. புலி எங்கு வாழ்ந்து வந்தது ?
2. புலி எப்படித் தருக்கித் திரிந்தது ?
3. புலி உருமியபோது எவை எவை நடுங்கின ?
4. புலி யாரைக் கண்டு எம் முறையில் அடங்கியது ?
5. முகம்மது புலிக்கு இட்ட கட்டளை யாது ?

### பயிற்சி :

1. இப்பாடல்களில் அடங்கிய கதையை எழுது.
2. முகம்மது இருந்த தோற்றத்தைப் பற்றி ஐந்து வரி எழுது.

# V. சிறு நூல்கள்

## பிள்ளைத் தமிழ்

### வருகைப் பருவம்

மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்துகில்
மடித்தலம் நனைப்ப, அம்மை
மணிவயிறு குளிரத் தவழ்ந்தேறி, எம்பிரான்
மார்பினில் குரவையாடி ;
முழவுமுதிர் துடியினில் சிறுபறைமு ழக்கி,யனல்
மோலிநீர் பெய்தவித்து ;
முளைமதியை நெளியரவின் வாய்மடுத் திளமானின்
முதுபசிக் கறுகருத்தி,
விழவுமுதிர் செம்மேனி வெண்ணீறு தூளெழ
மிகப்புழுதி யாட்டயர்ந்து,
விரிசடைக் காட்டினின் றிருவிழிகள் செப்பமுழு
வெள்ளநீர்த் துளையாமாடிக்,
குழவுமுதிர் செல்வி பெருங்களி வரச்சிறு
குறும்புசெய் தவன் வருகவே !
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே !

—குமரகுருபரர்

குறிப்புரை :

குமரகுருபரர் திருநெல்வேலியைச் சார்ந்த ஸ்ரீ வைகுண்டம் என்னும் ஊரில் இற்றைக்கு 300 ஆண்டுகட்கு முன் சைவ வேளாளர் குடியில் பிறந்தார். இவர் எழுதிய நூற்கள் சகல கலா வல்லி மாலை, நீதிநெறி விளக்கம் முதலியன. பிள்ளைத் தமிழ் என்பது தமிழில் உள்ள பிரபந்த வகையில் ஒன்று. புலவர் தாம் வழிபடும் கடவுளைச் சிறுபிள்ளையாக எண்ணிக் கொண்டு,

அக்கடவுளின் பிள்ளைமைப் பருவ நிகழ்ச்சிகளைப் பத்துப் பருவங்களாகப் பிரித்துக் கொண்டு நூறு பாடல்களால் விருத்தப்பாவில் பாடி அமைப்பது.

**அருஞ் சொற்கள் :**

மழவு-குதலைமொழி, தேறல்-குழந்தைவாயிலிருந்து ஒழுகும் நீர், குரவை-ஒருவகைக் கூத்து, முழவு-ஒலி, துடி-உடுக்கை, மோலி நீர்-சடையிலுள்ள கங்கை நீர், சேப்ப-சிவக்க, துளையம்-நீர்விளையாடல், குழவு-இளமை, செவ்வி-காட்சி, குரவு-குராமலர், கந்தபுரி-வைதீஸ்வரன் கோவில்.

**கேள்விகள் :**

1. குமரன் செய்யும் குறும்புகள் எவை ?
2. பிள்ளைத் தமிழ் எத்தனை வகைப்படும்; அவை யாவை?

**பயிற்சி :**

1. பிள்ளைத் தமிழில் வரும் பருவங்களைக் கேட்டு எழுது.
2. பெண்பால் பிள்ளைத்தமிழ் நூல் ஒன்றைக் குறிப்பிடு.

## திருவரங்கக் கலம்பகம்

## மேகவிடு தூது

கொண்டல்காள் ! உம்மைக் குறித்தே தொழுகின்றேன் ;
அண்டர்கா ணவரங்கத் தம்மானைக்—கண்டு
மனத்துளவத் தைப்படுமென் மையலெல்லாம் சொல்லிப்
புனத்துளவத் தைக்கொணீர் போய்.

**—பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்.**

**குறிப்புரை :**

இதனைப் பாடியவர் பிள்ளைப்பெருமாள் அய்யங்கார். வைஷ்ணவர் ; திருமலை நாயக்கன் காலத்தவர். இவர் எழுதிய நூல் அஷ்டப்பிரபந்தம் என்பது. இப்பாடல் அந்நூலிலிருந்து எடுக்கப்பட்டது. கொண்டல்காள்-மேகங்களே, அண்டர்-தேவர்.

**கேள்விகள் :**

1. அரங்கனை அய்யங்கார் எப்படிச் சிறப்பிக்கிறார் ?
2. பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் வேண்டுவது யாது ?

**பயிற்சி :**

1. அஷ்டபிரபந்த நூலைப்பற்றி வழங்கும் பழமொழியினைக் கேட்டு எழுது.
2. அஷ்டப்பிரபந்தங்களுள் நான்கினை அறிந்து கூறு.

# VI. தனிப் பாடல்கள்

## குடையின் பயன்

பகலோன் தெறுங்கிரணம் பாய்பறவை யெச்சம்
மிகமே லுறுதகற்றும் விண்ணின்—முகிலதனால்
பெய்யுமழையைத் தடுக்கும் ; பேரழகு மாமொருவன்
கையிற் குடையிருந்தக் கால். 1

## கைத்தண்டின் பயன்

முனியதட்டும் ; முட்டுக்கும் ; முன்னீ ரளக்கும் ;
கனியுதிர்க்குங் கவ்வுநாய் காக்கும் ;—தனிவழிக்குப்
பத்திரம தாக்கும் ! பயந்தீர்க்கும் ; பாம்படிக்கும்
கைத்தலத்திற் றண்டிருந்தக் கால். 2

## மிதியடியின் பயன்

கல்லு முறுத்தாது ; காலில்முட் டையாது ;
எல்லைமார்த் தாண டன்சூ டேருது ;—தொல்லைவரு
மாலை யிருளில் வழிநடக்கக் கூசாது ;
காலிற் செருப்பிருந்தக் கால். 3

—பெயரறியாப் புலவர்

TB 031,609 N57 184804



### குறிப்புரை:

இப்பாடல்களைப் பாடியவர் இன்ன புலவர் என்பது அறிதற்கு இல்லை. இவை தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் உள்ளன. எச்சம்-மலம், முகில்-மேகம், எல்லை-பகல்வேளை, மார்த்தாண்டன்-சூரியன்.

## சிலேடை

சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை யானதே—சங்கை
பிடித்தோர்க்கு மாறுதலை பித்தா! நின்பாதம்
படித்தார்க்கு மாறுதலைப் பார். 4

—காளமேகம்

### குறிப்புரை :

காளமேகம் திருவரங்கர் கோவிலில் பரிச்சாரகராய் இருந்து பின் திருவானைக்கா கோவில் பரிச்சாரகராக இருந்தவர். அங்கு இருக்கையில் அகிலாண்ட நாயகியார் அருள்பெற்றுக் கவிபாடும் வன்மை பெற்றவர். ஏறக்குறைய 200 ஆண்டுகட்குமுன் இருந்தவர். இவர் நகைச்சுவைப் பாடல்களைப் பாடவும் இருபொருள் முப்பொருள் அமைந்த பாடல்களைப் பாடவும் வல்லவர்.

### அருஞ் சொற்கள் :

ஆறுதலை-தலையில் கங்கையாறு, ஆறுதலை-ஆறுதலைகள், ஐங்கரன்-விநாயகன், மாறுதலை-மாறுப்பட்ட தலை, சங்கைப் பிடித்தோன்-திருமால், ஆறுதலை-ஆற்றின் நடு, இடம்-இருப்பிடம் (திருவரங்கம்), ஆறுதலை-அமைதியான நிலை.

### கேள்விகள் :

1. தனிப்பாடல் திரட்டாவது யாது ?
2. குடை, கைத்தடி, செருப்பு இவற்றின் பயன்கள் யாவை?
3. சங்கரர், திருமால், அன்பர் இவர்கட்கெல்லாம் எப்படி ஆறுதலை பொருந்தும் ?

### பயிற்சி :

1. சிலேடை இன்னது என்பதை விளக்கி எழுது.
2. பிரித்துக் காட்டு-ஐங்கரன், முட்டுக்கும் முன்னீர், கைத்தலத்திற்றண்டு, முட்டையாது.

———